பக்கங்கள் 24

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 363 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 8, திங்கள் 24.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பெரும்பாலான கடற்கரை பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்றும் காற்று மணிக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதன் போது, இடி, மின்னல்களால் ஏற்படும் சேதங்களை குறைக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தமிழீழம் அமைப்பதே எதிரணியின் நோக்கம்



## இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது ஆளும் கட்சி

“மைத்திரிக்கு தங்கையைக் காட்டிவிட்டு அக்காவை கொடுத்திருந்தாலும் பரவாயில்லை, இறுதியில் பாட்டியையே கொடுத்துள்ளனர். மஹிந்த அரசில் இருந்து ஏன் வெளியேறினோம் என விரைவில் அவர் வருத்தப்படுவார்”

யாழ்ப்பாணம், நவ. 24
எதிரணி இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக அறிவித்ததன் பின்னணியில் தனித் தமிழீழத்தை உருவாக்குவதற்கான செயற்திட்டமே உள்ளது.
இப்படி ஒரு குண்டைத் தூக்கிப்போட்டிருக்கிறது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி. இந்தச் சதித் திட்டத்தின் பின்னணியில் மேற்குலகநாடுகள் சிலவும் தொடர்புபட்டுள்ளன என்றும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.
கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அதில் கலந்து கொண்டார். அவரே எதிரணியின் பின்னால் உள்ளதாகக் கூறப்படும் தமிழீழம் அமைக்கும் திட்டம் பற்றிய விளக்கத்தைத் தெரிவித்தார்.
“எதிரணிகளின் பொது வேட்பாளர் என்பது சர்வதேச நாடுகளின் சூழ்ச்சி. இந்த வலையில் மைத்திரிபால சிறிசேன

❖22 ஆம் பக்கம் பார்க்க



## நெருக்கடிக்குள் அரசு சொல்கிறார் மைத்திரி

கொழும்பு, நவ.24
தான் வெளியேறிய 48 மணி நேரத்தினுள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது என்று முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.
“அரசிலிருந்து நான் வெளியேறிவிட்டேன் என்ற செய்தியை அடுத்து கடந்த 48 மணி நேரத்துக்குள் நாட்டில் பெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மஹிந்த அரசு கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. எதிர்காலத்தில் எமக்குச் சிக்கல்கள் அதிகம் வரும்” என்றார் மைத்திரிபால.
கோட்டே சிறி நாக விகா

❖19 ஆம் பக்கம் பார்க்க

# மாவீரர் நாள் 27ஆம் திகதி நினைவுகூர விடமாட்டோம்

## அடித்துக் கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், நவ. 24
எதிர்வரும் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள். அன்றைய தினம் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் அதனை நினைவுகூர்வதற்கு விடமாட்டோம். அதனை தடுத்து நிறுத்தியே தீருவோம்.
இவ்வாறு சூளுரைத்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து சமராடி மடிந்த போராளிகளை நினைவு கூரும் வகையில் வருடந் தோறும் நவம்பர் 27ஆம் திகதி வரை மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1989 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் புலிகள் அமைப்பால் கடைப்பிடிக்

❖22 ஆம் பக்கம் பார்க்க



என்ன வலிக்கின்றதா?

பக்கம் 12

## நகரில் நேற்றிரவு குழுச் சண்டை

யாழ்ப்பாணம், நவ.24
நாவாந்துறை சந்தைப் பகுதியில் நேற்றிரவு இரு குழுக்கள் இடையில் திடீர்ச் சண்டை ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதில் அறுவர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்பட்டது.
நகரில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ரசிகர்களுக்கும் ஊரவர்களுக்கும்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## ■ உள்ளே..

திறந்தே இருக்கிறது கதவு பக்.3
- பஸில்

வெளிநாடுகள் இல்லை பின்னே பக்.9
- மைத்திரி

சிறைக்கு தயாராகுங்கள் மைத்திரி பக்.9
- பொன்சேகா





வவுனியா, வைரவப்புளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானம் அருகில் ஒட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்தவின் சுவரொட்டிகளுக்கு சாணம் வீசப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதும் ‘தாய் நாட்டின் தீர்ப்பு மஹிந்த’, ‘மகத்துவம் மிக்க ஜனாதிபதி மஹிந்த’ என குறிப்பிட்ட சுவரொட்டிகள் நீலம், சிவப்பு, பச்சை நிறங்களில் வவுனியாவில் ஒட்டப்பட்டிருந்தன. அதில் வவுனியா, வைரவப்புளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானம் முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றின் பெயர்ப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த மஹிந்தவின் சுவரொட்டிகள் மீதே சாணம் வீசப்பட்டுள்ளது. (ற)

## இந்திய மீனவர்கள் 14 பேர் கைது

யாழ்ப்பாணம்.நவ.24
கச்சதீவுக்கு அண்மித்த நெடுந்தீவு கடற்பரப்பில் படகு பழுதடைந்த நிலையில் கடலில் தத்தளித்த 14 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
ஜகதாப்பட்டினத்தில் இருந்து மீன் பிடிக்க வந்த 10 மீனவர்கள் 2 படகுகள் பழுத

❖22 ஆம் பக்கம் பார்க்க

# ஆவணங்கள் இருக்கின்றன மஹிந்த விடுத்த எச்சரிக்கை

கொழும்பு, நவ.24
அரசில் இருந்து விலகிச் சென்று பொது எதிரணியின் பக்கம் சேர்ந்திருப்பவர்கள் பற்றிய இரகசியங்கள் அடங்கிய கோப்புகள் தன்வசம் இருக்கின்றன என்ற மெல்லிய எச்சரிக்கையை விடுத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
வெளியேறிச் சென்றவர்களுக்கு எதிராக அந்தக் கோப்புகளைத் தான் பயன்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறினாலும் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள

❖22 ஆம் பக்கம் பார்க்க

# யாருமே இனி போகமாட்டார்கள் நம்பிக்கை வெளியிடுகிறது அரசு

யாழ்ப்பாணம், நவ. 24
அரச கூட்டணியில் இருந்து இனி எவருமே வெளியேற மாட்டார்கள் என்று நேற்று நம்பிக்கை வெளியிட்டார் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி. அரசு வசம் உள்ள மாகாண சபைகளின் ஆட்சியும் ஆட்டம் காணாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.
“அரச தரப்பில் இருந்து இனி எவரும் வெளியேற மாட்டார்

❖22 ஆம் பக்கம் பார்க்க

"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை"
-கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

# கடும் நெருக்கடியில் இலங்கை இந்துக்கள்

## போர் முடிந்தும் நிலை மாறவில்லை
## புதுடில்லியில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கையில் போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த பின்னரும், இந்துக்கள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று புதுடில்லியில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.
உலக இந்து காங்கிரஸின், மூன்று நாள் சர்வதேச இந்து மாநாடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதுடில்லியில் ஆரம்பமானது.
இந்த மாநாட்டை திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா, விஸ்வ இந்து பரிசத் தலைவர் அசோக் சிங்கல், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பக்வத், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து, மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.
இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மீது செல்வாக்குச் செலுத்தும், ஆர்.எஸ்.எஸ், விஸ்வ இந்து பரிசத் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள் பங்குபற்றும் இந்த மாநாட்டில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.



அரசியல் அமர்வு ஒன்றுக்குத் தலைமையேற்று உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட, அங்குள்ள இந்துக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் முடிவுக்கு வரவில்லை என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## தீவிரம் பெற்றுள்ளன தேர்தல் வன்முறைகள்

### இதுவரை 4 முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம், நவ. 24
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னரே தேர்தல் வன்முறைகள் தீவிரம்பெற்றுள்ளன. இதுவரையில் நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவங்கள், புத்தளம், மாதம்பை மற்றும் கண்டியில் நேற்று இடம்பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை களுத்துறைமாவட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுடன் சேர்த்து நான்கு சம்பவங்கள் இதுவரையில் பதிவாகியுள்ளது.
மாதம்பை, மேதகமவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இதே பகுதியில் இன்னொருவரின் வீட்டின் மீதும் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது. கண்டியிலும் ஐ.தே.க ஆதரவாளர் வீட்டின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளரானதற்காக வெடி கொளுத்தியவர்களின் வீடுகள் மீதே துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே, தேர்தல் வன்முறை தொடர்பில் 4 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுஎன்றுதெரிவித்துள்ளது. (ற-5)

## அவளின் வைராக்கியம் தொடருக்கு மைத்திரிபாலவே கதாநாயகனாம்

### திரைக் கதை வசனம் சந்திரிகா இப்படிக் கூறுகிறார் டலஸ்

யாழ்ப்பாணம், நவ. 24
"எதிர்கட்சிகள் நடத்தும் மெகா சீரியலுக்கு 'அவளின் வைராக்கியம்' என்று பெயரிடலாம். இதன் கதாநாயகனாகவே மைத்திரி களமிறக்கப்பட்டுள்ளார். இந்தநாடகத்துக்கானகதை, திரைக்கதை வசனத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எழுதியுள்ளார்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் டளஸ் அழகப்பெரும.
கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, ஆளுங்கட்சி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"மைத்திரிபால சிறிசேனவின் வரலாறு குறித்து அவர் மீது எனக்கு மரியாதை உள்ளது. எனினும் அவரது தற்போதைய செயற்பாடுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுடன் எதிர்காலம் குறித்து கவலையை ஏற்படுத்துகிறது.
அவரது செயற்பாட்டை, புரியும் மொழியில் கூற வேண்டுமாயின் இது மெகா தொலைக்காட்சி நாடகம். அந்த நாடகத்திற்கு பெயரிடப்படவில்லை. இதனால் அதற்கு 'அவளின் வைராக்கியம்' என்று பெயர் வைக்குமாறு யோசனை கூறுகிறேன்.
இந்தத் தொலைக்காட்சி நாடகத்தின் தயாரிப்பாளர்கள் இலங்கையர்கள் அல்ல. இந்து சமுத்திரத்திற்கு அப்பால் பலமிக்க நாடுகளின் நபர்கள். நாடகத்திற்கான கதை, திரைக்கதை வசனத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கஎழுதியுள்ளார். பிரதியாக்கம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க. நாடகத்தின் சண்டை இயக்குநரை எதிர்காலத்தில் காண முடியும். கதாபாத்திரங்களை ஏற்கும் கலைஞர்கள் தற்போது தயாராகி வருகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## கதவு திறந்தேயிருக்கின்றது மீளவும் வந்து இணையலாம்

### அழைக்கின்றார் பஸில்



யாழ்ப்பாணம், நவ. 24
ஆளுங்கட்சியில் இருந்து எதிர்கட்சிக்கு தாவிச் சென்றவர்கள் மீண்டும் வந்து ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ளலாம் என்று ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
கொலன்னாவை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை, ஜனாதிபதியின் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"நேற்றுவரை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்பது சங்கீதக் கதிரை போன்று பலரைச் சுற்றிக் கொண்டிருந் தது. பலவந்தமாக அதில் இருத்தி வைக்கப்பட முயன்ற போதிலும் பலர் அதிலிருந்து தவிர்த்துக் கொண்டனர். ஏனெனில் அதனை ஏற்றுக் கொண்டால் பலியாடுகளாக நேரிடும் என்று அவர்களுக்குத் தெரியும்.
எனவேதான் யாரும் இல்லாத நிலையில் ஆளுங் கட்சியிலிருந்து ஒருவரை அழைத்துக் கொண்டு போய் அதில் உட்கார வைத்துள்ளார்கள். அந்த வகையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் என்பன தெளிவாகத் தெரிந்த நிலையில் இந்த தேர்தல் அலுவலகம் திறக்கப்படுகின்றது.
ஆளுங்கட்சியை விட்டு விலகிப் போனவர்களுக்கு இன்னும் சந்தர்ப்பம் காத்திருக்கின்றது. அவர்கள் திரும்பி வந்தால் மீண்டும் எம்முடன் இணைந்து கொள்ள முடியும்"- என்று தெரிவித்தார். (ற-5)

## விபத்துக்கள்

### மோ.சைக்கிள் சறுக்கி இளைஞர் காயம்

மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்த இளைஞர், மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கியதால் தூக்கி வீசப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பளை, ஏ-9 வீதியில் நடந்தது.
மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த சந்திரசேகரம் சாந்தகுமார் (வயது-24) என்பவரே காயங்களுடன் சாவகச்சேரி மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)

### கடலில் மூழ்கி இருவர் சாவு

மாத்தறை வெலிகம மிரிஸ்ஸ கடலில் மூழ்கி இருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். 14 மற்றும் 19 வயதான இருவரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலங்கள் மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. உயிரிழந்த இருவரும் உறவி னர்கள் என்றும் கூறப்படுகின்றது. (ற)

### வீதி விபத்தில் சிறுவர்கள் காயம்

கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் காலை 7.30 அளவில் இடம்பெற்றுள்ளது. சிறுமி ஒருவரும், அவரது சகோதரரும் பயணித்த சைக்கிள் மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்து இடம்பெற்றபோது அருகிலிருந்த மற்றுமொரு சிறுவனும் காயங்களுக்கு உள்ளானான். (ற)





ஹற்றன், டிக்கோயா பகுதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக 18 வீடுகளின் கூரைகள் காற்றினால் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக் கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட 18 குடும்பங்களை சேர்ந்த 48 பேர் குறித்த தோட்டத்தின் நூலகம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

## முரண்பாடுகளைத் தீர்க்கலாம் பணிப்புறக்கணிப்பு வேண்டாம்

### பஸ் சேவைகளை நடத்துமாறு வடக்கு, போக்குவரத்து அமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம்.நவ.23
தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் வெகுவிரைவில் தீர்க்கப்படும். மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் பணிப்புறக்கணிப்புக்கள் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என்று கோரியுள்ளார் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"போக்குவரத்து அமைச்சு மத்திய அரசின் கீழ் இருப்பதால் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்து அமைச்சின் அமைச்சர்களுடன் கலந்துரையாடியே உரிய தீர்வை பெற்றுக் கொள்ளமுடியும்.
குறிப்பாக நேரஅட்டவணைப் பிரச்சினையால் பஸ்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டு வருகிறது. அதற்காக 5 மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் இலங்கைப் போக்கு வரத்துச் சபை, தனியார்பஸ்சங்கங்களின் தலைவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடிநேர அட்டவனை போடு வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருப்பதால் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பணிப்புறக்கணிப்பை மேற்கொள் ளாது மக்கள்நலன் கருதிய சேவைக்கு ஒத்துழைக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 08 திங்கள் (24.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 363


# இறப்பு பதிவின்போது காரணத்தை சரியாக குறிப்பிடுதல் மிக அவசியம்

**அவை புள்ளி விவரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரன் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், நவ. 24

இறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படும் போது, இறப்புக்கான சரியான காரணத்தை குறிப்பிட்டு பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு சரியான காரணங்கள் குறிப்பிடாமல் பதிவு செய்யப்படுவதால் புள்ளிவிவரங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே இது தொடர்பில் பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்று தெரிவித்துள்ளார் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"திடீரென்று வீடுகளில் இறப்புகள் நிகழ்கின்றபோது, பொதுமக்கள் வைத்தியசாலைக்கு வருவதில்லை. வீடுகளில் வைத்தே கிராம சேவையாளர் ஊடாகப் பதிவு செய்கின்றனர். இறப்புக்கான சரியான காரணம் குறிப்பிடப்படுவதில்லை. சில வேளைகளில் இவ்வாறு மேற்கொள்ளப்படும் போது, கொலைகள் கூட விசாரணைகள் இன்றி பதிவுக்கு உட்பட்டு விடும்.

வைத்தியத்துறையில் தேர்ச்சியில்லாத ஒருவரால், இறப்புக்கான சரியான காரணத்தை தெரிவிக்க முடியாது. எனவே இலங்கை மருத்துவ சான்றிதழ் உள்ள எந்தவொரு வைத்தியர் ஊடாகவும் இறப்புக்கான சரியான காரணத்தை இனங்கண்டு அதனூடாகவே பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். இறப்பதற்கு 14 நாள்களுக்குள் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியராவது குறித்த நபரை சோதித்திருப்பின் அவர் இறப்புக்கான காரணத்தை குறிப்பிட முடியும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைவர் காலமானார்

வலி.தென்மேற்கு, நவ. 24

வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் சண்முகம் சிவகுமார் நேற்றுக் காலை காலமானார்.

நெஞ்சுவலி காரணமாக சனிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது..

வாக்குகளின் அடிப்படையில் வலி.தென்மேற்குப் பிரதேசசபையில் உப தவிசாளராக நியமிக்கப்பட்ட இவர் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து பதில் தவிசாளராகக் கடமையாற்றி வந்த இவர் 2014 மே மாதத்திலிருந்து தவிசாளராக நியமிக்கப்பட்டார். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக தவிசாளராகக் கடமையாற்றி வந்த இவர் சுகவீனம் காரணமாக ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம், கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

சுகவீனம் காரணமாக தவிசாளருக்குரிய முழுப்பொறுப்பையும் உபதவிசாளர் உஸ். [illegible]கேந்திரனிடம் ஒப்படைத்த [illegible]வர் கடந்த வாரம் உப தவிசாளரிடம் கையளிக்கப்பட்ட பொறுப்பை மீளப்பெற்று சபையில் கடமையாற்றி வந்தார்.

இன்று இவரது தலைமையில் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டக் கூட்டம் நடைபெறவிருந்தது. அத்துடன் கடந்த தேர்தல் காலத்தின் போது இவருடைய வீட்டுக் கேற்றில் நாய்த்தலை கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. (ற-115)

# அந்தர்பல்டிக்கு ஆள்கள் தயார்

### வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது இருதரப்பிலிருந்தும்

கொழும்பு, நவ.24

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு இன்று நாடாளுமன்றில் நடைபெறவுள்ள நிலையில், ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சியில் இருந்து கட்சித் தாவல்கள் இடம்பெறும் என்று அறியமுடிகின்றது.**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியனவும் வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளன. ஜாதிக ஹெல உறுமயவும் எதிராகவே வாக்களிக்கும் என்று அறிய முடிந்தாலும், வாக்கெடுப்பில் பங்கேற்காதிருப்பது பற்றியும் அந்தக் கட்சி பரிசீலித்து வருகின்றது. இது விடயம் தொடர்பில் அந்தக் கட்சியின் மத்திய குழு நேற்று ஆராய்ந்தது. இறுதி முடிவு இன்று மதியத்துக்குள் அறிவிக்கப்படும்.

அத்துடன், அரச கூட்டிலிருந்து வெளியேறிய அமைச்சர்கள் வரவு - செலவுத்திட்டத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மீரியபெத்த மக்களுக்கான உதவி பொருள் கையளிப்பு

### த.தே.கூ. மற்றும் கோவில் குளம் இளைஞர் கழக அனுசரணையில்



யாழ்ப்பாணம், நவ. 24

வவுனியா வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கோவில் குளம் இளைஞர் கழகத்தின் அனுசரணையில் சேகரிக்கப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் கொஸ் லாந்தை மீரியபெத்தவில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நேரடியாக கையளிக் கப்பட்டுள்ளன.

இயற்கையின் சீற்றத்தால்

(22 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு அரசியல் பலம் குறைந்து விட்டது

### சனத் தொகையை அதிகரிப்பது அவசியம்
### முன்னாள் செயலாளர் கே.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரசியல் பலம் குறைந்துவிட்டது. அதற்கு சனத்தொகை அதிகரிக்கப்படவேண்டும். அரசியல் பலம் இல்லாவிட்டால் மற்றைய தேவைகளை எம்மால் பெறமுடியாத நிலை ஏற்படும் - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சரின் முன்னாள் செயலாளர் கே.விக்னேஸ்வரன்.

கிளிநொச்சி - யாழ்ப்பாணத்துக்கான இரணைமடு குடிதண்ணீர்த்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துரை வழங்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறும்போது,

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ. 24

ஜனாதிபதித் தேர்தலின் போது ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்கு தகுதியானவர்கள் என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் திணைக்களம், தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலின் போது 2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர் பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளது. எனவே தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பவர்கள், தமது பெயர் 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொண்டு விண்ணப்பிக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் கேட்டுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சரின் அலுவலக கட்டட வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 22

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்திலேயே குறித்த அலுவலகம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவையின் கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டதாக அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு 400 மில்லியன் ரூபா வரையில் நிதி தேவை என்றும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டமாக கீழ்த் தளத்தின் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டது. அதிலேயே தற்போது மாகாண சபையின் மாதாந்தக் கூட்டங்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன விவசாய முறையால் நிலத்தடி நீர் மாசடைகிறது

### பொருத்தமான திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்
### பேராசிரியர் கந்தசாமி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

"யாழ்.மாவட்டத்தில் மழை இல்லாத காலத்தில் நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்வதுடன், நவீனத்துவமான விவசாய முறைகளில் உரப் பாவனைகளும் நீரை மாசடையச்செய்துள்ளது. அதன்காரணமாக நல்ல குடிநீர் கிடைக்காமல் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்"- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழ

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## சின்னக்குட்டி சிதம்பரநாதன்

(ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர் C.I.D நயினாதீவு)



நிகழும் ஜயவருடம் ஐப்பசி மாதம் 8 ஆம் நாள் (25.10.2014) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று கார்த்திகை மாதம் 8 ஆம் நாள் (24.11.2014) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுகிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் எமது நயினாதீவு இல்லத்திலும் நடைபெறுவதுடன், அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5 ஆம் வட்டாரம், நயினாதீவு,
12 B 1/1, 46 ஆவது ஒழுங்கை,
கொழும்பு-06,
T.P:011 236 3954, Mob:077 356 1262

குடும்பத்தினர்.

(41442)(4.3.6)


# ரயில் கடவை மூடப்பட்ட பின் வீதியை கடந்தவர் கைது

தென்மராட்சி, நவ.24

ரயில் வருவதற்கான சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டு கடவை மூடப்பட்ட பின்னர் சைக்கிளுடன் வீதியைக் கடந்த நபரை அங்கு நின்ற பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரை வெள்ளிக் கிழமை சாவகச்சேரி நீதி மன்றில் முற்படுத்தியபோது உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபட மூடப்பட்ட கடவையை கடந்தீர்களா என்று நீதிவான் கேட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லை என்று கூறியதால் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரமும் கொடிகாமம் பகுதியில் ரயில் கடவை மூடப்பட்ட பின்னர் வீதியைக் கடக்க முற்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்

நன்றி நவிலலும்

## அமரர் கயிலாசபிள்ளை நந்தகுமார்

(வடக்கு மாகாண ஆளுநரின் தமிழ்மொழி ஊடகச் செயலாளர் கல்வி இணைப்பாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சு)



தோற்றம் 30.08.1961 — மறைவு 25.10.2014

உதவி எனும் பெயரால் உலகை ஈர்த்த உத்தமனே
பதவிதனை நினையாது பணிவோடு பணி செய்தீர்
தாழ்பணிந்து கந்தனிடம் வரம் கேட்டு நின்றீரப்பா
வேண்டும்போது கந்தனிடம் உங்கள் வாழ்வுகேட்க, மறந்ததேனோ
கேட்டவரம் கிடைக்குமுன்பே சுவண்டைவிட்டு ஏன் பறந்தீர்
நீண்டு செல்கொடும்பிணி அப்பா தீண்டியதை யாரறிவார்
மீண்டிடுவீர் என நினைத்து வேண்டுதல்கள் பல செய்தோம்
வேலவனே எமை வெறுத்தான் வெந்தழலில் மனம் வேகுதய்யா!

அமரர் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபோதும் அவரது மரணச்செய்தி கேட்டும் உடன் வந்து உதவியோர்க்கும் தொலைபேசி, தந்தி, பத்திரிகை மூலமும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலமும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர்க்கும், நேரில்வந்து அனுதாபம்தெரிவித்து ஆறுதல் கூறிய வடக்கு மாகாண ஆளுநர்க்கும் அவரது செயலாளருக்கும் அவரது அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி துறைசார் அதிகாரிகள், ஊடகங்கள் மூலம் மரணச்செய்தியை வெளியிட்ட ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

இன்று (24.11.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத், தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கேணியடி முதலாம் ஒழுங்கை (பள்ளத்தடி)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி

## காந்தரூபி புவனேந்திரன்

அன்னை மடியில் 22.07.1952 — ஆண்டவன் அடியில் 25.10.2014



தாங்க முடியவில்லை தவிக்கின்றோம் எண்ணம் எல்லாம் நீங்கள் தான்
ஏக்கமெல்லாம் நீங்கள் தான் ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
உங்கள் பாசம் போல் வருமோ நாங்கள் வாழும் காலம் வரை
ஈரவிழிகளுடன் உங்களுக்காகக் காத்திருப்போம்.

கடந்த (25.10.2014) சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி காந்தரூபி புவனேந்திரன் அவர்களின் மரணசெய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி இணையம் மூலமாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் மூலமாக துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த நல் உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 22.11.2014 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அவரது வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
அஜெய் பட்டுச்சோலை- மானிப்பாய்.
சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.

(41424) (4.6.3)

# காய்ச்சல் நோயாளர்கள் கைக்குட்டை பாவிக்குக

## சாவகச்சேரி மருத்துவமனையில் அறிவுறுத்து

தென்மராட்சி, நவ. 24

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சைபெற வருவோர் கைக்குட்டையுடன் வருமாறு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அறிவுறுத்தப்பட்டு வருவதாக நோயாளர்கள் தரப்பில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

"தற்போது தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒருவித சளிக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் தொண்டை நோ, தடிமன், இருமல், தலைப்பாரம் தலை அம்மல், விட்டு விட்டு காய்ச்சல் உடல் நோ ஆகியவற்றால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்தக் காய்ச்சல் ஏற்படுவோர் தடிமனால் பாதிக்கப்பட்டு தும்மும்போது அது ஏனையோருக்கும் அருகில் இருக்கும் ஏனைய நோயாளர் களுக்கும் பரவக்கூடிய அபாயம் உள்ளது. இதனாலேயே கைக்குட்டையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இரண்டு, மூன்று தினங்கள் இந்தக் காய்ச்சல் ஏற்படுவதால் பாதிப்பு இல்லை என்றாலும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது பொதுமக்களின் கடமையாகும். காய்ச்சலால் பீடிக்கப்பட்டு தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர்.

அந்த நோயாளர்களுடன் ஏனைய நோயாளிகளில் நீரிழிவு, அஸ்மா, சிறு குழந்தைகளும் வேறு நோயாளர்களும் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கைக்குட்டை பயன்படுத்துவது நல்லது என்று ஆலோசனை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

# உரிய பயிற்சி வழங்குகின்றனவா சாரதி பயிற்சிப் பாடசாலைகள்?

## ஆராயவேண்டியுள்ளது என்கின்றனர் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்டத்தில் மாத்திரமல்லாது வடக்கில் விபத்துகள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றன. அவற்றில் 80- 90 வீதமானவை மோட்டார் சைக்கிள் விபத்துகளே. பலர் வாகன அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தாலும் போக்குவரத்து விதிமுறைகளை, வீதிச் சமிக்ஞைகளை, குறியீடுகளை அவர்கள் உரிய முறையில் பின்பற்றவில்லை. அல்லது அது குறித்துத் தெரிந்திருக்கவில்லை. அவர்களுக்கு இங்குள்ள சாரதி பயிற்சிப் பாடசாலைகள் உரிய பயிற்சியை வழங்குகின்றனவா என்று ஆராயவேண்டியுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வீதி விபத்துகளால் ஏற்படும் இறப்புகளையும் பாதிப்புக்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ். மருத்துவ சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வூட்டும் செய்தியாளர் சந்திப்பு யாழ். போதனா மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அதில் கலந்து கொண்ட மருத்துவர்களே இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றுவது குறைவாக உள்ளது. அவர்கள் ஏன் அவ்வாறு பின்பற்றத் தவறுகின்றனர்? அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியை அவர்கள் பின்பற்றவில்லையா அல்லது விதிமுறைகள் தெரியாது வீதியில் வாகனம் செலுத்துகிறார்களா என்று தெரியவில்லை.

பலர் உரிய முறையில் வாகனம் செலுத்தவில்லை. வீதியில் நின்று பார்த்தால், எத்தனை பேர் வீதி ஒழுங்கைப் பின்பற்றவில்லை என்பது தெரியும். நான் எனக்குப் பொறுப்பாக இருக்க மாட்டேன். மற்றவர்கள் தான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று கவனமாக இருக்க வேண்டும்.

இளைஞர்கள் தான் மாற வேண்டும். போக்குவரத்து விதி முறைகள் தொடர்பில் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் கூறவேண்டும். கல்வி, சுகாதாரத் துறையினருடன் இருந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சைக்கிளில் செல்பவர்களும் போக்குவரத்து விதிமுறைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும். அவர்களும் விபத்துக்குக் காரணமாகி விடுகின்றனர் என்று தெரிவித்தனர்.

யாழ். மருத்துவ சங்கத் தலைவர் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் மருத்துவர்களான கோபி சங்கர், ரவிராஜ், தயாளன் அம்பலவாணர், சுரேந்திர குமாரன், மயூரதன் மற்றும் யாழ். போக்குவரத்துப் பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ-4)


**வீடு வாடகைக்கு**

செழியன் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடு வாடகைக்குண்டு.

(41455) (4.3.6)

தொடர்பு: 077 486 7984

**வீட்டுடன் காணிவிற்பனைக்குண்டு**

சங்கத்தானை, சாவகச்சேரி A 9 றோட் அருகில் சங்கத்தானை ஞானோதயா ரியூற்றறி அருகில் 2 அறை வீடு கிணறும் சேர்ந்த 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (41456)(4.3.6)

தொடர்பு: 077 8697268, 0033 2382 90231


# நல்லூர் பிரதேச சபை
# வழங்குநர்களை பதிவு செய்தல் - 2015

**சபையானது 2015 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கவுள்ளது.**

**பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள், கம்பிவகைகள்)
07. கற்கள், மணல்
08. தீந்தைகள் வகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
11. மின் வழங்கும் பொருள்கள், மின் பாவனைப்பொர்ருள்கள்
12. எரிபொருள்கள், உயராய்வு நீக்கிகள்
13. இரும்புப் பொருள்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனை மரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள் கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோற்பொருள்கள்
20. அலங்காரப் பொருள்கள்
21. இலத்திரனியல் பொருள்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
04. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
07. மின் சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
08. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
09. வாகனங்கள் சுத்திகரிப்பு
10. கோலவுடை தைத்தல்
11. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
12. இறப்பர் முத்திரை தயாரித்தல்
13. கழிவகற்றல் சேவை (Gully emptier service)

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2015 எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தலைவர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல. 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்"** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 15.12.2014 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 021 222 2700 அல்லது 021 320 2207 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

ப. வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர், பிரதேச சபை, கொக்குவில்.

(சி.17785) (45.6.3)

# பயனாளிகள் 141 பேருக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சி, நவ. 24

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 141 பயனாளிகளுக்கு செவ்வாய்க்கிழமை தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து குறைந்தது இரண்டு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தையல் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரினால் 141 பயனாளிகளின் விருப்பத்தின் பேரில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வன்முறை ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தால் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட மற்றும் மாகாண ரீதியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை 16 நாள்கள் வன்முறை ஒழிப்புதினமாக உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் சமூக செயற்பாட்டு மையம்யாழில்பெண்களின் வன்முறை தொடர்பான நேரடி கலந்துரையாடல்களையும், விழிப்புணர்வு நிகழ்வுகளையும். முன்னெடுக்கவுள்ளது.

நிறுவனத்தின் கீழ் உள்ள 35 கிராம் மட்ட செயற்பாட்டுக் குழுக்கள் ஊடாக இந்தச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (வ-14)





**ஓய்வு பெற்றுவிட்டீர்களா?**

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு

**குறிப்பு:** முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வாரப் பயிற்சிக் காலமுடையது
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்றசான்றிதழ் வழங்கப்படும்.
- **பணி நிலையங்கள்:**
  யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி.

**அடிப்படைத் தகைமைகள்:**

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை **10.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

விளம்பர இல. 5032
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(41444) (45.6.3)

## குடும்பப் பெண்ணை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, நவ.24

வயலுக்குள் நெல்லை மூடி வளர்ந்திருந்த களைகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட குடும்பப் பெண் அங்கு மறைந்திந்த பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை தச்சன் தோப்பில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இராஜதுரை தங்கமலர் (வயது -48) என்பவர் பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)


## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வு பெற்ற நிதி முகாமையாளர் துறைமுக அதிகார சபை)



இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவபாதசுந்தரம் கடந்த (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அகிலேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பு- சுதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செந்தூரன் (நியூசிலாந்து), துவாரகன் (நியூசிலாந்து), கீர்த்திகா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்தினி (நியூசிலாந்து), உஷாந்தினி (கரண வாய்), சாந்தரூபன் (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும், கமலாதேவி (வரணி), சரோஜினிதேவி (வரணி), விமலாதேவி (வரணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனேஷ் (நியூசிலாந்து), சந்தோஷ் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும், அமிர்தவல்லியின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற ஜெயவீரசிங்கம் மற்றும் சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மருமகனும், சோழங்கச் சேனாதிராஜா (பொறியியலாளர்-லண்டன்), சச்சிதானந்தன் (கிராம் அலுவலர் -மருதங்கேணி) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், நடராஜா (ஓய்வுபெற்ற நீதிமன்ற சுருக்கெழுத்தாளரும், மொழி பெயர்ப்பாளரும்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவசுப்பிரமணியம் (கணக்காளர்-கனடா),சிவபாக்கியம் (வரணி), சிவகாமிப்பிள்ளை (கொழும்பு), கௌரிமனோகரி (ஆசிரியை), செல்வக்குமார் (கணக்காளர் -லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.11.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கப்பத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்குறிச்சி,
வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கந்தையா சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் C.T.B கோண்டாவில்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் 22.11.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், வளலாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தாவரணம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், லிங்கேஸ்வரி (லண்டன்), சத்தியேந்திரன் (பெரும்பாக உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம்), சத்தியசிறி (கனடா), இராசநிதி (ஆசிரியை - யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்), சதாசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கிருஷ்ணமூர்த்தி (லண்டன்), அருந்தவ மாலா (ஆசிரியை-யா/ இராமநாதன் கல்லூரி), ஆனந்தி (கனடா), லோகேஸ்வரன் (பிரதி அதிபர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), நிசாந்தினி (கனடா) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் மனோன்மணி (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் பவளராணி (ஜேர்மனி), விஜயலட்சுமி (சுவிஸ்) மற்றும் சரோஜினிதேவி, தருமலிங்கம் (J.P. உப தவிசாளர் வலி. கிழக்குப் பிரதேசசபை) ஆகியோரின் சகோதரனும், பாக்கியம் (திருநெல்வேலி), ஆச்சிமுத்து (கிளி -கனடா), இராசமணி (நீராவியடி) ஆகியோரின் மைத்துனரும், வைத்திய கலாநிதி தீபா (கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் - லண்டன்), காயத்திரி ( B.Sc. புவியியல் குவின்ஸ் மேரி பல்கலைக்கழகம் - லண்டன்), பானுஷா (மாணவி - யா/ வேம்படிமகளிர் கல்லூரி), யாழரசன் (மாணவன் - யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஆதீஸ் (ஜோர்ஜ் பல்கலைக்கழகம் - கனடா), ஆதினி (கனடா), தர்ஷிகன் (மாணவன் யா/ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), தர்ஷிகா (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), தினேசன் (மாணவன் - யா/ யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), தமிதா (கனடா), கம்ஷா (கனடா), சயானா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கரந்தன் வீதி, நீர்வேலிதெற்கு, நீர்வேலியிலுள்ள (வெங்காயச்சங்கத்தடி) அவரது இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.சத்தியேந்திரன் ( மகன் - D.O)
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
T.P. 021 223 0510

(41462)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


## மீரியபெத்த மாணவர்களின் கற்றல் செயற்பாடு ஆரம்பம்

கொழும்பு, நவ.24

மீரியபெத்த மண்சரிவால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இன்று மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

மண்சரிவு காரணமாக பூனாகலை பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளின் மாணவர்களது கல்வி நடவடிக்கை கடந்த ஒரு மாதமாக பாதிக்கப்பட்டிருந்தது. மண்சரிவு ஏற்பட்ட மீரியபெத்த உள்ளிட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பூனாகலை பகுதியிலுள்ளவர்களும் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்

இந்த நிலையில் மீரியபெத்தையில் பாதிக்கப்பட்ட மாணவர்களை, தமது பாடசாலையில் சேர்த்துக் கொண்டுள்ளதாக பூனாகலை தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ஆர்.மோகன் தெரிவிக்கின்றார். மாணவர்களின் நலன் கருதி கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். எனவே, மாணவர்களை இன்று முதல் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறும் அதிபர் ஆர்.மோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ற)

## பிரதான நகரமெங்கும் சதொச நிலையங்கள்

### உள்நாட்டு வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.24

இலங்கையில் உள்ள பிரதானமான பெருந் தெருக்களை உள்ளடக்கும் விதமாக அந்தப் பெருந்தெரு மார்க்கங்களில் அமைந்துள்ள பிரதானமான நகரங்கள் அனைத்திலும் சதொச. விற்பனை நிலையங்களை நிறுவும் செயற்பாடு எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு அமைய எதிர்காலத்தில் நாட்டில் உள்ள பிரதான வீதிகளில் அமைந்துள்ள அனைத்து நகரங்களிலும் 100 சதொச விற்பனை நிலையங்களைத் திறந்து வைப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு முடிவதற்குள் மேலும் 25 விற்பனை நிலையங்கள் சதொச விற்பனை வலையமைப்பில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது நாடு முழுவதும் 300 சதொச விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன என்றும், வர்த்தகச் சந்தை விலையை விடக் குறைந்த விலைக்கு இந்த விற்பனை நிலையங்கள் ஊடாக மக்களுக்கு பொருள்கள் வழங்கப்பட்டுவருகின்றன என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (ற-22)

## செயலமர்வு

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விளைசார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல் தொடர்பான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## மரண அறிவித்தல்

### லோப்பையா ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற நில அளவை திணைக்களம் நிர்வாக அதிகாரி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லோப்பையா ஜேம்ஸ் (21.11.2014) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லோப்பையா - லூர்தம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், லீனஸ், பபி, விஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பங்கிறேசியஸ், மரியம்மா மற்றும் பெர்னதேத் (நாயகி), பொன்னுக்கோன் (மாதகல்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர்ர்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (29.11.2014) அன்று கனடாவில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்
திருமதி பெ.மாசிலாமணி
லோ.பொன்னுக்கோன்,
T.P. 021 300 6687

சேன். தோமஸ் வீதி,
மாதகல்.

(41466) (45.6.3)



## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா ஆறுமுகம்



அளவெட்டி மேற்கு, தம்மளையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா ஆறுமுகம் கடந்த (21.11.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், மங்கையர்க்கரசி (கொழும்பு), இராமச்சந்திரன் (ஆசை- ஜேர்மனி), சந்திராதேவி (உடுவில்), பராசக்தி (பவளம் -சுவிஸ்), பாலச்சந்திரன் (பாலா- ஜேர்மனி), சிவசக்தி (சக்தி -ஜேர் மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசு (கொழும்பு), சரஸ்வதி (ஜேர்மனி), குமாரசாமி (உடுவில்), பவோற்பவன்(சுவிஸ்), நிர்மலாதேவி (ஜேர்மனி), நவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான கனகரத்தினம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜிதரன், விநோதன், நந்தினி, பிரதீபன், பிரமிளா, சிந்துஜா, மயூரன், ஆரூரன், அபிராமி, செந்தூரன், மதூரன், பவ தாரணி, கிருஷிகன், நிருஜா, நிசாந், காருண்ஜா, நிவேதா, குமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிருந்தன், ஆதித்யா, லக்ஷன், லக்ஷனா, அபிநயா, பிரதீப், பிரஷா, ஹரிசன், ஹாருனிகா, சுஜித் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கொட்டடி உடுவில் சுன்னாகத்தில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் இறுதிச்சடங்குகள் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி மேற்கு, தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டடி, உடுவில், சுன்னாகம்.
T.P:021 224 1453

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# வடக்கில் 5 தொழிற்சாலைகளை மீண்டும் இயக்குவதற்கு முயற்சி

## அமைச்சரவை அனுமதிக்காகக் காத்திருப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
வடக்கில் பெரிய தொழில் வாய்ப்புக்களை வழங்கி வந்த 5 தொழிற்சாலைகளையும் மீள இயக்குவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.,

வடக்கு மாகாணத்தில் ஆனையிறவு உப்பளம், காங்கேசன்துறை சிமெந்து ஆலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை உட்பட பிரதான 5 பெரிய தொழிற்சாலைகளையும் மீள இயக்குவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

அரச வழங்கல் முயற்சியாண்மை அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த குறித்த தொழிற்சாலைகள் போர்க்காலச் சூழலால் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் இருந்த காலப் பகுதியில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்தன

தற்போது தொழிற்சாலைகள் இயங்கி வந்த பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்ட பின்னர் தொழில் வாய்ப்புக்காக வெளிமாவட்டங்களுக்கும் நகரப் பகுதிகளுக்கும் சென்று வருகின்றனர். கடந்த காலங்களில் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் தொழிற்சாலைகள் மீள இயக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில்கள்முயற்சிஅபிவிருத்தி அமைச்சிடம் விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக அரச வழங்கல் முயற்சியாண்மை அமைச்சிடம் தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தியையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் குளோரின் சார்ந்த இரசாயன உற்பத்திப் பொருள்களையும், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் பொதியிடலை மேற்கொள்வதற்கும், ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி மேற்கொள்வதற்கும், அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது- என்றார். (த-14)

## யாழ்.நகரில் கழிவகற்றலுக்கு மேலும் 66 தொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், நவ. 24
குப்பைகள் அகற்றும் நடவடிக்கைகளுக்காகத் தற்காலிகமாக மேலும் 66 தொழிலாளர்களை நியமித்து டிசெம்பர் மாதத்தில் திண்மக் கழிவகற்றும் வேலைகளை உரிய முறையில் செய்து கொள்ளக் கூடியதாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதன் தெரிவித்தார்.

நகரின் பெரும்பாலான வீதிகளில் குப்பைகள் நிரம்பிக் கிடப்பதாகவும், தனியாரிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்டுள்ள உழவு இயந்திரங்களில் மூன்று தொழிலாளர்களுக்குப் பதிலாக ஐந்து தொழிலாளர்களை அனுப்புவதாகவும் தொழிற்சங்கமும் இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாகவும் மாநகர ஆணையாளர் கூறினார்.

கல்லுண்டாய்வெளியில் உள்ள குப்பைகளை அகற்றுமாறு அமைச்சர் தெரிவித்திருப்பதாகவும், முதலமைச்சரின் உத்தரவுக்கிணங்க எல்லைகள் போடப்பட்டு வேலி அமைக்கப்பட்டுள்ளதாகவும், 20 அடி உயரமான கம்பங்கள் இதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஏழு பேர் அங்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-7)

## வெளிக்களப் பணியாளருக்கு ரூ.300 விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 24
அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு விசேட கொடுப்பனவாக ரூபா 300 வழங்குவதற்குரிய சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்ட இந்தக் கொடுப்பனவு கடந்த 2014 ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் மத்திய அரசின் கீழ் பணியாற்றும் 41 தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரசின் கீழ் பணியாற்றும் 26 தர உத்தியோகத்தர்களுக்கும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த மார்ச் 31ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை அரச அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் விவரங்கள் சுற்றறிக்கையில் குறிப்பிடவில்லையென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வருமானப் பரிசோதகருக்கு இரு நாள் மேலதிக வேதனம்

### வலி.தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

வலி.தென்மேற்கு, நவ. 24
வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகருக்கு வேலைப் பளு அதிகரித்துள்ளதால் கடமை நாள்களை விட மாதத்தில் மேலதிகமாக இரு நாள்களுக்கு வேதனம் வழங்கச் சபை அனுமதி வழங்கியதை அடுத்து இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சட்டவிரோத கட்டடங்கள் மற்றும் வரி செலுத்தாதவர்கள், உரிமம் எடுக்காதவர்கள் உட்பட சட்ட விரோதச் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது.

இதனை மேற்கொள்ளும் வருமானப் பரிசோதகர் சந்திரகுமார் வேலைப்பளு அதிகரித்துள்ளதால் கடமை நாள்களை விட மாதத்தில் மேலதிகமாக இரு தினங்களுக்கு வேதனம் வழங்குமாறு பிரதேச சபையைக் கோரியிருந்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நான்கு உப அலுவலகப் பிரிவுகளிலும் இடம்பெறும் சட்ட விரோதச் செயல்களுக்கு எதிராக மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் வருமானப் பரிசோதகராக வேலை செய்யும் சந்திரகுமார் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வருகிறார்.

பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் வருமானப் பரிசோதகரின் கோரிக்கை பற்றி விரிவாக ஆராய்ந்து உறுப்பினர்கள் கடமை நாள்களை விட மாதத்தில் மேலதிகமாக இரு தினங்களுக்கு வேதனம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியதையடுத்து இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-115)


## சிறுநீரக நோயாளர்கள் மாதாந்த கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்குக

தென்மராட்சி, நவ. 24
சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் நோயாளர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று அரச மருத்துவச் சான்றிதழை இணைத்து விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறித்த நோயால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)



யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டிய இலவச கால்நடைகள் மற்றும் மரக்கன்றுகள் கொடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பொதுநூலகத்துக்கு அண்மையிலுள்ள திறந்தவெளி அரங்கில் இடம் பெற்றபோது. (வ-109)

## பஸ்ஸில் கைப்பையை வெட்டி பணத்தைச் சுருட்ட முயற்சி

யாழ்ப்பாணம், நவ.24
பஸ்ஸினுள் பெண்ணின் கைப்பையை லாவகமாக பிளேற்றால் வெட்டி அதனுள் இருந்த வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பணத்தையும் கைபேசியையும் அபகரிக்க முற்பட்ட இள்ளஞன் அதே பெண்ணிடம் மாட்டிக் கொண்டான். அவனைக் கடுமையாக எச்சரித்த பின்னர் பொலிஸார் அவனை விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் பஸ்ஸில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

திருமணமான குறித்த பெண் வங்கியிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபா பணத்தைப் பெற்று தனது கைப்பையில் வைத்து அதனைத் தன்னுடன் வைத்துக் கொண்டு பஸ்ஸில் பயணித்துள்ளார். அந்த பஸ்ஸில் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த குறித்த சந்தேகநபரும் பயணித்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு தொலைபேசி அழைப்பு வரவே கைத்தொலைபேசியை தனது கைப்பையிலிருந்து எடுக்க முற்பட்டார். அதன்போது கைத்தொலைபேசிக்கு மேலாக ஒன்றரை லட்சம் ரூபா பணக் கட்டு இருந்துள்ளது. அதனைக் குறித்த இளைஞன் கண்டுவிட்டான்.

பெண் தொலைபேசியில் உரையாடிவிட்டு பையினுள் அதனை வைத்த பின்னர் குறித்த இளைஞன் தான் மறைத்து வைத்திருந்த பிளேற்றால் குறித்த கைப் பையை வெட்டியுள்ளான். பணம் எடுக்க முற்படும் போது தனது பை அசைவதைக் கண்டு திரும்பிப் பார்த்தபோதே சம்பவம் தெரிய வந்தது. அதனை அடுத்து பிளேற்றை பஸ்ஸின் ஜன்னல் ஊடாக வெளியே வீசிவிட்டான்.

பஸ்ஸில் பயணித்தவர்கள் அவனைப் பிடித்துக் கடுமையாக எச்சரித்தனர். சம்பவத்தையடுத்து பஸ் உடனடியாக யாழ்.பொலிஸ் நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டது. சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த பெண் பொலிஸில் முறைப்பாடு செய்ய முற்படவில்லை. அதனால் குறித்த இளைஞனை பொலிஸார் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பிவிட்டனர். (வ-4)

## யாழில் டெங்கு அதிகரிப்பு நாளாந்தம் 6 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ். குடாநாட்டில் இந்த மாதம் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ளதோடு நாளாந்தம் 6 பேர் வரை பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டிலேயே டெங்கு தொற்றுவது அதிகரித்துள்ளது. அதனால் இந்த மாதம் மாத்திரம் யாழ். போதனா மருத்துவமனையில் 131 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாத்திரம் 7 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். போதனா மருத்துவமனை தவிர்ந்த மருத்துவமனைகளிலும் டெங்கு நோயாளர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் அநேகமானோர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இந்த மாதம் மாத்திரம் 134 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த வருடத்தின் இது வரையான காலத்தில் ஆயிரத்து 231 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர மன்னாரில் இந்த மாதம் மாத்திரம் 44 பேரும் இந்த வருடம் 201 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் இந்த மாதம் 9 பேரும் வவுனியாவில் 4 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (வ-4)

# தற்காலிக கொட்டகைகளில் ஐந்து வருட அவல வாழ்க்கை

## சிவபுரம் மக்கள் கண்ணீர்

கிளிநொச்சி, நவ.24

தற்காலிகமாக 6 மாதங்களுக்கு மட்டுமே என்று கூறி கொட்டகைகளில் மீள்குடியமர்த்தப்பட்ட நாம், அவற்றிலேயே கடந்த ஐந்து ஆண்டுகளாக அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

சொல்லொணா துயரங்களை அனுபவிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளனர் பரந்தன் சிவபுரம் கிராமத்தில் உள்ள மக்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற போது கண்டாவளைப் பிரதேச செயலகத்தால் முறைப்படி மீள் குடியேற்றம் செய்யப்பட்ட சிவபுரம் கிராமத்தில் 320 குடும்பங்கள் வசிக்கின்றன.

அந்தக் கிராமம் அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் எவற்றிலும் உள்ளீர்க்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகள் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கன மழையால் இந்தக் கிராமத்தின் வீதிகள் சேறும் சகதியுமாகவும் நீர் தேங்கி நிற்பதாலும் அந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். குறிப்பாக இந்தக் கிராமத்தில் வசிக்கும் பாடசாலை மாணவச் சிறார்களின் நிலைமை மிக மோசம்.

அங்கு வசிக்கும் 320 குடும்பங்களுக்கும் இதுவரை அரசினது வீட்டுத்திட்டங்கள் எதுவுமே வழங்கப்படவில்லை என்றும், மீள்குடியமர்த்தப்பட்டபோது தற்காலிகமாக ஆறு மாதங்களுக்கு குடியிருக்கவென வழங்கப்பட்ட தகரம், தறப்பாள் போன்றவற்றால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலேயே தொடர்ந்தும் வசிக்கின்றோம்.

தற்காலிக இருப்பிடங்கள் பழுதடைந்துள்ளமையால் தற்போது பெய்துவரும் மழையில் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றோம் என்றும் அந்த மக்கள் கூறுகின்றனர். (ந-456)

# மழை காரணமாக 5 வீடுகள் பாதிப்பு

## வவுனியா இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

வவுனியா, நவ.24

வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பல வீடுகள் மற்றும் போக்குவரத்து பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக 5 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா.

"தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக வவுனியா பிரதேச செயலகத்தின் உட்பட்ட கற்பகபுரம் கிராமத்தில் ஒரு வீடும் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் வசித்த 20 குடும்ப உறுப்பினர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர்" - என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல வீதிகளுடன் ஊடான போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-421)

# ஒட்டுசுட்டான் கொள்ளை; பொலிஸ் சார்ஜன்ட் கைது

## இதுவரை ஐவர் கைது என பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவமொன்று தொடர்பாக பொலிஸ் சார்ஜன்ட் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் மற்றுமொரு பொலிஸார் தொடர்புபட்டுள்ளார் என்று கூறப்படுகின்றபோதும் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஒட்டுசுட்டான் கெருடமடுவில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கொள்ளையர்கள் வீடுபுகுந்த அங்கிருந்தவர்களைக் கட்டி வைத்துவிட்டு, சுமார் 20 லட்சம் ரூபா பணம் மற்றும் 14 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டனர்.



பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நான்கு பேரும் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து, கைது செய்யப்பட்டனர்.

அதன்போது ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியும் இருந்தனர். கொள்ளையில் ஈடுபட்டவர்களில் ஒருவர் முன்னர் அதே பகுதியில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் என்று கண்டறியப்பட்டதை அடுத்து, பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். ஒட்டுசுட்டான் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நான்கு பேரும் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து, வவுனியா பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து மேலும் ஒரு பொலிஸாரும் அதில் தொடர்புபட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

குறித்த பொலிஸ் சார்ஜன்ட் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றி இடமாற்றலாகி மட்டக்களப்புக்கு சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது.

அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4)

# பெரிய வெங்காய விதைகள் வழங்கல்



மன்னார், நவ.24

மன்னார் மாவட்டத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கையை மேற் கொள்ளும் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 370 விவசாயிகளுக்கு பெரிய வெங்காய விதைகளும், உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. யு.எஸ்.ஏ.ஐ.டி அமைப்பின் நிதியுதவியுடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் குறித்த பெரிய வெங்காய விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் வெங்காயச் செய்கையை அதிகரித்து விவசாயிகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டமாக 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயிரம் தொன் உற்பத்தியை பெறுதலே இந்தத் திட்டத்தின் நோக்கமாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வெங்காயச் செய்கையில் தற்போது விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதையடுத்தே விவசாய அமைச்சால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ந-14)

# ஒரு வருடத்துக்கு மேலாகியும் நிரப்பப்படாத உறுப்பினர் பதவி

## பூநகரிப் பிரதேச சபையில்

பூநகரி, நவ. 24

பூநகரிப் பிரதேச சபையில் காலியாகவிருக்கும் ஒரு உறுப்பினர் பதவிக்கான வெற்றிடம் ஒரு வருடத்துக்கு மேலாகியும் நிரப்பப்படாமல் இருப்பதனால் ஆளும் கட்சியின் பலம் கேள்விக்குறியாகவுள்ளது.

தற்பொழுது கட்சியிலிருக்கும் ஐந்து உறுப்பினர்களில் ஒருவர் எதிர்க் கட்சிப் பக்கம் தாவினால் பிரதேச சபையின் ஆட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் கைமாறிவிடும்.

10 உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேச சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதால் அவருடைய இடம் ஒரு வருடத்துக்கு மேலாக நிரப்பப்படாமல் காலியாகவிருக்கின்றது.

இந்த நிலை குறித்து தவிசாளர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருக்குப் பல தடவை அறிவித்திருந்த போதிலும் இன்று வரை அந்த வெற்றிடத்தை நிரப்ப எவரும் முன்வரவில்லை. இதனால் தற்பொழுது ஆளும் கட்சியில் 5 உறுப்பினர்களும் எதிர்க் கட்சியில் 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிலையில் ஆளும் கட்சியிலிருக்கும் 5 உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் எதிர்க் கட்சிக்குத் தாவினால் பிரதேச சபையின் ஆட்சிப் பலம் ஈ.பி.டி.பி. கட்சியின் பக்கம் மாறிவிடும். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு ஆளும் கட்சியில் காலியாகவிருக்கும் உறுப்பினர் பதவிக்கு ஒரு உறுப்பினரை நியமிக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-115)

# ஆலய நகைகளை அபகரித்த பூசகர் விளக்கமறியலில்

தென்மராட்சி, நவ.24

தென்னிலங்கை காலி மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயத்தில் 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவான ஆலய பூசகரை சாவகச்சேரி பொலிஸார் நுணாவில் கிழக்குப் பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்த நபரை புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். அவ்வரை காலி நீதிமன்றில் ஒப்படைத்து நாளை செவ்வாய்க்கிழமை நீதிமன்றுக்கு கொண்டு வருமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (வ-9)

# காணாமற்போனோர் குடும்பத்துக்கு உதவிகள் வழங்கவென பதிவுகள்

போரின்போது காணாமற்போனோரது குடும்பங்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கவெனக் கூறி கிளிநொச்சியில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பல இடங்களிலும் பதிவுகள் இடம் பெற்று வருகின்றன.

காணாமற்போனோரைக் கண்டுபிடிப்பதாகக் கூறி பல ஆணைக்குழுக்களும் பல அமைப்புக்களும் காணாமற்போனோர் பற்றிய விவரங்களைத் திரட்டி பல பதிவுகளை பல தடவைகள் மேற்கொண்டிருந்தன. ஆனாலும் இதுவரை காணாமற்போனவர்கள் பற்றிய முடிவுகள் எதுவுமின்றி காணாமற்போனோர்களது குடும்பங்கள் அவலப்பட்டு அந்தரித்து பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து கஷ்டப்பட்டே வருகின்றன.

காணாமற்போனவர்களது குடும்பங்கள் உதவியற்ற நிலையில் அவல வாழ்க்கை வாழுகின்றார்கள். உதவித் திட்டங்கள் வேண்டுமானால் காணாமற் போன உறவுகளை இறந்துவிட்டார்கள் என்று கூறி இறப்புச் சான்றிதழ் பெறுமாறும் கோரப்படுகின்றது என்றும் சிலர் கோருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது கிளிநொச்சியில் காணாமற்போனோரது உறவுகளை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அழைத்து உங்களுக்கு இதுவரை என்னென்ன உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன? நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளதா? வாழ்வாதாரத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளனவா? படிக்கும் பிள்ளைகளுக்கு உதவித் திட்டங்கள் ஏதாவது வழங்கப்படுகின்றனவா? என்று கேட்டுவிட்டு அப்படி எதுவும் வழங்கப்படவில்லை என்று கூறியவர்களிடம் ஏன் உங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை? என்ன காரணத்துக்காக என்பவை தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் இவ்வாறான பதிவுகளால் எந்தப் பயனும் இல்லை என்று சலித்துக் கொள்ளும் காணாமற்போனோரின் உறவினர்கள், எல்லாவற்றுக்குமான விடை தெரிந்து கொண்ட தம்மிடம் கேள்வி கேட்கின்றனர் என்றும் விசனம் தெரிவித்தனர். (ந-426)

# எங்களுக்குப் பின்னால் வெளிநாடுகள் இல்லை


## தேவையில்லாது பழி போடுகின்றனர் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 24
"பொது எதிரணியின் பின்னாலோ அல்லது பொது வேட்பாளராகிய எனக்குப் பின்னாலோ, எந்த விதமான வெளிநாட்டுச் சக்திகளும் இல்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றேன்"- இவ்வாறு எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிரச தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சட்டண அரசியல் நிகழ்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"மஹிந்தவின் ஆட்சி தொடர்பில் கவலையடைகின்றேன். 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், அதை நான் ஒரு அழிவாகவே உணர்ந்தேன். நாட்டு மக்களின் நலனுக்காகவே நாங்கள் இணைந்திருக்கின்றோம். இதனைக் குழப்புவதற்காக எம்மீது தேவையில்லாமல் பழி போடுகிறார்கள்.
எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றமை மகிழ்ச்சி தருகிறது. காரணம், அன்றைய தினம் தான் பண்டாரநாயக்கவின் பிறந்ததினம். அவரது கட்சிக்கு புத்துயிர் கிடைக்கும் தினமாக அன்றைய தினம் அமைய விருப்பதால், பண்டாரநாயக்கவின் ஆசை நிறைவேறும்.
நான் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

# நான் தூங்கிய சிறையில் மைத்திரி தூங்க நேரிடும்

## எச்சரிக்கின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ. 24
முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவையும் சிறையில் அடைக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.
அரசு மாற்றுக் கொள்கையாளர்களை பழிவாங்க முயற்சிக்கின்றது. மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு முற்றுமுழுதாக அகற்றிக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மைத்திரிபாலவுடன் குரோத உணர்வுடன் செயற்படுகின்றனர். எவ்வாறு மைத்திரிபாலவுக்கு எதிராக வழக்குத் தொடர்வது என யோசிக்கின்றார்கள். - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"எவ்வாறு வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பி வைப்பது என்பது பற்றி திட்டமிடுகின்றார்கள். சில வேளைகளில் நான் சிறையில் தூங்கிய அதே மேசையில் மைத்திரிபாலவும் தூங்க நேரிடலாம். எனவே இப்போதே உடற்பயிற்சி செய்து உடலை தெம்படையச் செய்து கொள்வது நல்லது. ஆளும் கட்சியின் ஒரு தொகுதியினருக்கு இன்று புத்தி தெளிந்துள்ளது.
மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய எனது சாதாரண தர வகுப்புத் தோழர் ராஜித, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோருக்கு நன்றி பாராட்டுகின்றேன். எவ்வாறெனினும் எமது கட்சியின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படக் கூடிய வகையிலான மேடைகளில் ஏறப் போவதில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## 10 ஆயிரம் பொலிஸாரின் இடமாற்றம் இரத்து

கொழும்பு, நவ. 24
10 ஆயிரம் பொலிஸாரின் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இடமாற்றங்கள் அனைத்தும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்தவை தோற்கடிப்பதே எமது பிரதானமான இலக்கு

## ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார கூறுகின்றார்



கொழும்பு, நவ. 24
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதையே பிரதான இலக்காக கொண்டிருக்கின்றோம் - என்று தெரிவித்துள்ளது ஜே.வி.பி.
நேற்றுமுன்தினம் இரவு தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் இடம்பெற்ற அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார்.
மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தடவையாக போட்டியிடும் இந்தத் தேர்தல் சட்டவிரோதமானது என்ற அடிப்படையில் அதில் வேட்பாளர் ஒருவரை பெயரிடுவதில்லை என்று ஜே.வி.பி. ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இந்தநிலையில் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேன தற்போது எதிர்க்கட்சிகளின் சார்பில் பெயரிடப்பட்டுள்ளார். இதன் போது ஜே.வி. பியின் செயற்பாடு எவ்வாறு இருக்கும் என்று அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை முடிவுறுத்தும் நிலைப்பாட்டை ஜே.வி.பி. கொண்டிருக்கின்றது. இந்த விடயத்தில் மக்கள் தமது தீர்மானத்தை தாமே எடுக்கவேண்டும் என்பதே ஜே.வி.பியின் கொள்கை. மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க மக்கள் விரும்பினால் அது அவர்களின் தீர்மானமாக அமையும். எனினும் தமது கட்சி இவருக்கு வாக்களிக்கலாம் என்ற கோரிக்கையை மக்களிடம் முன்வைக்காது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ரணில் ஒரு தியாகி

## ரத்ன தேரர் புகழாரம்

கொழும்பு, நவ. 24
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு தியாகி என்று புகழாரம் சூட்டியுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அதுரலியே ரத்ன தேரர்.
அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு இருந்தும் நாட்டின் நலன் கருதி ரணில் விக்கிரமசிங்க தனது வாய்ப்பை விட்டுக் கொடுத்துள்ளார். அதன் மூலம் உரிய நேரத்தில் பொருத்தமான முடிவை எடுத்து தனது அரசியல் சாணக்கியத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.
தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதைப் பார்க்கிலும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரை களமிறக்கி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதில் ரணில் வெற்றி கண்டுள்ளார். இது அவரது சாணக்கியத்தை மட்டுமன்றி நேர்மையையும் தியாகத்தையும் வெளிப்படுத்துகின்றது. இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## திஸ்ஸவுக்கு திடீர் சுகவீனம்



கொழும்பு, நவ. 24
ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க திடீர் சுகவீனம் காரணமாக நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கடந்த சில நாள்களாக கட்சி மற்றும் அரசியல் செயற்பாடுகளில் கடுமையாக ஈடுபட்டிருந்த, திஸ்ஸ திடீர் சுகவீனமுற்றிருப்பது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
ஆயினும் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு சாதாரண சுகவீனமே ஏற்பட்டிருக்கின்றது என்றும், இரண்டொரு பரிசோதனைகளின் பின்னர் அவர் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்ப முடியும் என்றும் அரச மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# அரசில் இருந்து எவரும் இனி விலக மாட்டார்கள்

## பிரதியமைச்சர் ரோஹன கூறுகின்றார்

கொழும்பு, நவ. 24
எவரும் அரசில் இருந்த வெளியேற மாட்டார்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த சிலரே அரசில் இணைய உள்ளனர் என்று பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
மாத்தளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"சந்திரிகாவின் சூழ்ச்சி காரணமாகவே மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் அரசில் இருந்து விலகினர். மைத்திரிபால சிறிசேன அதில் சிக்கிக்கொண்டார். அடுத்த சில தினங்களில் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த சிலர் அரசில் இணைய உள்ளனர்.
மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் அரசில் இருந்து வெளியேற மாட்டார்கள். உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து கொள்ள உள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை அரசில் இருந்து விலகிச் செல்பவர்கள் விலகி செல்லட்டும் என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இருக்க முடியாதவர்கள் சென்றால்தான் எமக்கு பலம் கிடைக்கும். 26 பேர் குறைந்து போனாலும் அரசிடம் பலர் உள்ளனர். போகிறேன் என்று கூறி போகிறவர்கள் இறுதியில் குளத்தில்தான் குதிக்க வேண்டும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தேசிய மொழி கொள்கை செயற்படுத்தப்படவில்லை

## இரான் விக்ரமரத்ன எம்.பி. குற்றச்சாட்டு

**அரசு திறனற்றுப் போயுள்ளது. நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையிலுள்ள சில பரிந்துரைகளை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.**

கொழும்பு, நவ. 24
சிங்கள மொழி தெரியாத ஒருவர் பொலிஸ் நிலையமொன்றுக்கு முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய சென்றால் அவரது முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்வதற்கு எந்தவொரு மார்க்கமும் அங்கில்லை.
குறிப்பாக தமிழ் மொழியைப் பேசுபவர்களே இந்த நிலைப்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. - இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே. க. நாடாளுமன்ற உறுப்பினரான இரான் விக்ரமரத்ன.
நாடாளுமன்றத் தொடரில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"தேசிய மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில், அதைச் சரியாக முறைப்படியாக செயற்படுத்துவதற்கு இந்த அரசு திறனற்றுப் போய் உள்ளது. நல்லிணக்கஆணைக் குழுவின் அறிக்கையிலுள்ள சில பரிந்துரைகளை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.
பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் கருமமாற்றக் கூடிய உத்தியோகத்தர்கள் தேவையாகவுள்ளது. தேசிய கீதம் சம்பந்தமாக அரசமைப்பிலுள்ள நியமங்களை நடைமுறைப்படுத்தாதிருப்பது ஏன்? ஓர் இனத்துக்கு மாத்திரம் அது விடயத்தில் வேற்றுமை காட்டப்படுகிறது.
சிங்கள மொழியில் போன்றே தமிழ் மொழியிலும் கூட அந்தந்த இனத்தவர்களுக்கு தேசிய கீதத்தை இசைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ற-22)

# 10 வருடங்கள் உங்களுடன்

# 2004 - 2014

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"

YALLARUVI BOTTLED DRINKING WATER

10 ஆவது

24 நவம்பர் 2014



## மதிப்புக்குரிய எமது அன்பான வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அபிமானிகளுக்கு அன்பு கலந்த வணக்கம்

போர்க்காலத்தின் போது யாழ்.குடாநாட்டு மக்களின் அன்றாட மற்றும் அத்தியாவசிய தேவைகளின் காரணமாகவும், தூரநோக்கு சிந்தனையுடனும், சமூக ஆர்வலர்களின் அறிவுரைகளுக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட எமது சுவிஸ் மினரல் நிறுவனம் இன்று (24.11.2014) திங்கட்கிழமை தனது 10ஆவது அகவையை நிறைவு செய்து 11 ஆவது அகவையில் கால்பதிக்கும் இந்நாள் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க நன்னாளாகும்.

கடந்துவந்த 10 வருடங்களாக வாடிக்கையாளர்கள் நீங்கள் எமக்கு வழங்கிய ஆதரவின் காரணமாக யாழருவி நிறுவனம் எமது மக்களின் சமூக பொருளாதார மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களில் நேரடியாகவும், ஏனைய நிறுவனங்களுடன் இணைந்தும் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிந்தது.

* சுனாமி இடர் நிவாரணப் பணிகள்
* நிசாப் புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் திட்டங்கள்
* போர்க் காலத்தில் தடைப்பட்ட அத்தியாவசிய தேவைகளான மருத்துவமனை மற்றும் மின் உற்பத்தி நிறுவனங்களின் செயற்பாட்டுக்குரிய விநியோகங்கள்
* மறுவாழ்வு உதவித் திட்டங்கள்
* வன்னியில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கான உதவித் திட்டங்கள்


மேற்கண்ட திட்டங்கள் ஊடாக நூற்றுக்கணக்கான எம்மக்கள் நன்மையடைந்துவருகின்றார்கள்.

Welcome



போர் ஓய்ந்து அனைத்துப் பாதைகளும் குடாநாட்டை நோக்கி பயணிக்க ஆரம்பித்த போது பல சவால்களும், போட்டிகளும் குடாநாட்டை வர்த்தகரீதியில் முற்றுகையிட்ட போது எமது சுயதொழில் முயற்சியாளர்களும், மரபுரீதியான உற்பத்தியாளர்களும் இப்புதிய முற்றுகைக்குள் சிக்குண்டு மீளமுடியாத துர்ப்பாக்கியநிலையில் இருந்த காலம் முதல் இன்றுவரை

* சுயதொழில் முயற்சியாளர்களின் சக்திக்கு மீறிய உறுதியான செயற்பாடுகள்
* இன மத, அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் எமது பிரதேசத்தின் உண்மையான சமூக பொருளாதார பொருண்மிய மேம்பாடுகளில், அக்கறையுள்ளவர்களின் தொடர்ச்சியான ஆதரவு
* இலாபத்தை மட்டும் நோக்காது சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் சமூக நலன்கொண்ட வர்த்தகர்களின் துணிச்சலான நடவடிக்கைகள்



மேற்படி காரணங்களால் இன்றுவரை யாழருவி நிறுவனம் உட்பட்ட பல சுயதொழில் முயற்ச்சியாளர்களின் நிறுவனங்கள் தொடர்ச்சியாக இயங்கி எமது பிரதேசத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றமையால் எமது பிரதேசத்திற்குள் புதிய பண சுழற்சியையும் ஏற்படுத்தியுள்ளமை முக்கியமான விடயமாகும். இந்நிலையை மேலும் மேம்படுத்துவதற்கு மேற்குலக எம்மவர்களின் வர்த்தக நடவடிக்கைகளுடன் கைகோர்ப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

இன்று மேற்குலகநாடுகளில் சுமார் 10 லட்சம் பேர்வரை வாழ்ந்துவருகின்றமையும் அவர்களின் அன்றாட உணவுத்தேவைகளில் நாளாந்தம் 1,500 ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை எமது தாயக உணவு வகைகளுக்காக இந்தியா உட்பட்ட பல ஆசிய நாடுகளில் இருந்து நாள் ஒன்றுக்கு 50 லட்சம் அமெரிக்கன் டொலர் பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்கின்ற பொருள்கள் யாவும் எமது பிரதேசத்தில் உரிய முறையில் உற்பத்தி செய்யப்படும் நிலைமைகள் உருவாகும் போது எமது பிரதேசமும் எமது பிரதேச உற்பத்தியாளர்களும் பெரிய நன்மையடையக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே எமது நிறுவனத்தின் எதிர்காலத் திட்டமாகும். இதற்கான முன் ஏற்பாடாக ஐரோப்பியாவில் உள்ள முன்னணி இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடி வருகின்ற தகவலை இந்நாளில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றோம்.



எனவே, எமது பிரதேசத்தின் எதிர்கால பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் எமது தன்னிறைவுக்கும் ஏற்றவகையில் சூழ்நிலைகள் உருவாகியுள்ள இன்றைய காலகட்டத்தை நாம் தவறவிடாமல் எமது பிரதேசத்தின் இயற்கை வளங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல் உற்பத்திகளை மேற்கொண்டு ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்னிய செலாவணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு எமது சுயதொழில் முயற்சியாளர்கள் முன்வர வேண்டும்.

எமது நிறுவனம் எமது பிரதேசங்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் தன்நிறைவுக்கும் தேவையான சகல முயற்சிகளையும் துணிவுடன் முன்னெடுக்கும் என்பதை தங்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் நாம் கடந்து வந்த 10 ஆண்டு காலத்தில் நீங்கள் எமக்கு வழங்கிய ஆதரவை எதிர்காலத்தில் நாம் எமது மக்களுக்காக முன்னெடுக்க உத்தேத்திருக்கும் திட்டங்களுக்கும் வழங்கி வெற்றிபெற செய்வீர்கள் என நம்புகின்றோம்.



## தாயக உற்பத்திகளை சர்வதேச தரத்துக்கு மாற்றிடுவோம்.





**சி.பிரபாகரன்,**
**நிர்வாக இயக்குநர்,**
**யாழருவி சுவிஸ்மினரல்**
Global Business Network.
www.yallaruvi.com
yallaruvi@inbox.com

(C17681)(12.6)





# இப்படியும் ஒரு தயாரிப்பு

மனிதக் கழிவில் இருந்து தயாரிக்கப்படும் வாயுவில் இயங்கும் பஸ் தனது முதல் பயணத்தை இங்கிலாந்தில் மேற்கொண்டுள்ளது.
இந்தப் பஸ் ஓடுவதற்கு டீசல் தேவையில்லை. மனிதக் கழிவுகள் மற்றும் கெட்டுப்போன உணவுப் பொருள்கள் ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படும் வாயுவில் இந்த பஸ் இயங்குவதாகக் கூறப்படுகிறது.
இதில் ஒரே நேரத்தில் 40 பேர் வரை பயணம் செய்யலாம். ஐந்து மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் வெளியேற்றும் கழிவுகளில் இருந்து ஒரு தாங்கி நிறைந்த வாயு தயாரிக்கலாம் என்றும், அதில் சுமார் 190 கிலோ மீற்றர் வரை பஸ்ஸை இயக்கலாம் என்றும் வடிவமைத்தவர்கள் கூறியுள்ளனர்.
தனது முதல் பயணத்தை ஆரம்பித்துள்ள பஸ் படிப்படியாக அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்த பஸ்ஸில் மனிதர்கள் மலசலகூடத்தில் உட்கார்ந்திருப்பது போன்ற படங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# 'தலயி'ன் பொங்கல் பரிசு



கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித்குமார் நடிக்கும் புதிய படமான 'என்னை அறிந்தால்' தைப் பொங்கலை முன்னிட்டு வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
அஜித்துக்கு ஜோடியாக இந்தப் படத்தில் அனுஷ்கா மற்றும் த்ரிஷா நடித்துள்ளனர். ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார். ஏ. எம். ரத்னம் தயாரித்துள்ள இந்தப் படம் பொங்கலுக்கு வெளியாவது அதிகாரபூர்வமாக தயாரிப்பாளர் தரப்பில் அறிவித்துள்ளனர்.
அஜித் இதில் இருவித தோற்றங்களில் நடித்துள்ளார். அதில் ஒன்று பொலிஸ் வேடம். இதன் போஸ்டர்கள் வெளியாகி ரசிகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன. விரைவில் படத்தின் இசை வெளியாக உள்ளது. இந்தப் படம் பொங்கலுக்கு இரண்டு நாள்கள் முன்னதாக ஜனவரி 13 ஆம் திகதியே வெளியாகிறது.






"அப்பா... விண்ணப்ப படிவத்தில் 'மதர் டங்க்' என்று இருக்கு. என்னத்தை எழுதுவது..?.."
"ரொம்ப நீளம் என்று எழுது.:."


"தம்பி உன் பெயர் என்னப்பா..?."
"பசுவுக்கு உடம்பு சரி இல்லை..."
"புரியவில்லையே..."
"கௌவ்சிக்' என்பதை தமிழில் சொன்னேன்..."

"மனேஜர், உங்கள் ஹோட்டல் அறை 708 இலிருந்து கதைக்கின்றேன்"
"சொல்லுங்க, என்ன வேண்டும்?"
"எனக்கும் எனது மனைவிக்கும் பெரிய வாக்குவாதம். ஜன்னல் வழியா வெளியே குதிச்சுடுவதாக மிரட்டுறா"
"இது உங்கள் தனிப்பட்ட விடயம்."
"முட்டாள், ஜன்னல் திறபடுகுது இல்லை. சீக்கிரம் அதைத் திறக்க ஓர் ஆளை அனுப்பு"

# முதலிடம் நோக்கி உயிர் மெய்

சீ தமிழ் தொலைக்காட்சியில் உயிர் மெய் தொடர் ஒளிபரப்பாகி வருகின்றது. மருத்துவம் பற்றி முதன் முறையாக தமிழ் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் தொடர் இதுவாகும். ஆரம்பத்தில் டி.ஆர்.பி. ரேட்டிங்கில் சரிந்திருந்த இந்தத் தொடர் தற்போது முதலிடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது.
அமலா, ஷில்பா, வி.எஸ்.ராகவன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். ஆரம்பத்தில் கதையின் களம், வைத்தியசாலை, நோயாளி, வைத்தியர்கள் என்று நகர்ந்தது. இதனால் ரசிகர்களை அவ்வளவாக ஈர்க்கவில்லை. இதைப் புரிந்து கொண்ட இயக்குநர் கதையின் போக்கை மாற்றி விட்டார்.
வைத்தியர் கவிதா (அமலா) பணியாற்றும் தயானந்தா வைத்தியசாலையில் சொத்துப் பிரச்சினை வருகின்றது. வைத்தியசாலையின் நிர்வாகி தயானந்தாவின் சாவுக்குப் பின்னர் அவரது பிள்ளைகள் வைத்தியசாலையை இலவசமாக நடத்த விரும்பவில்லை. பணம்கொழிக்கும் நிறுவனமாக நடத்தவே விரும்புகின்றனர்.
இதனால் வைத்தியர் கவிதா (அமலா) பராமரிப்பிலுள்ள ஏழை நோயாளர்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேற வேண்டிய நிலை வருகின்றது. அத்துடன் தயானந்தாவின் பிள்ளைகளும், கவிதாவுக்கு நிறைய சிக்கல்களைக் கொடுக்கின்றனர். இதை எப்படிச் சமாளிக்கின்றார் என்று கதை தற்போது நகர்கின்றது. இதனால் டி.ஆர்.பி. ரேட்டிங் சடுதியாக அதிகரித்துச் செல்கின்றது.





# செல்பி

டுபாயில் ஒளிப்பட கலைஞர் ஜெரால்ட் 'டுபாய் 360' திட்டத்துக்காக உலகின் உயரமான கட்டடமான டுபாய் புர்ஜ் கலிபா கட்டடத்தில் ஒளிப் படங்களை எடுக்கும் பணியில் ஈடுபடும் போது அந்தக் கட்டடத்தின் உச்சியில் நின்று 'செல்பி' எடுத்து வெளியிட்டுள்ளார். ஏறக்குறைய 2 ஆயிரத்து 722 அடி உயரத்தில் நின்றே செல்பி எடுத்துள்ளார்.
இது குறித்து அவர் கூறியதாவது; 2015 ஜனவரியில் வெளியாக உள்ள டுபாய் 360 திட்டத்துக்காக 360 பாகை கோணத்தில் படங்கள் எடுக்கப்பட்ட இந்தப் பணிகள் முழுமை அடைந்தவுடன் டுபாயை பல்வேறு கோணங்களில் படங்களாக, வீடியோவாக காண முடியும். மேலும் இந்தக் கட்டடத்தின் உச்சியில் நின்று படம் எடுத்து பகிர்ந்து கொள்வது எனக்குக் கிடைத்த மிகபெரிய வாய்ப்பு என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் வானில் அதிசயங்கள் தோன்றுகின்ற காலம் இது!

“தீதும் நன்றும் பிறர்தரவாரா” என்பது புற நானூற்று பாடலின் வரிகள்.

தென்னிலங்கை அரசியல் வானில் இன்று கிளர்ந் தெழுந்துள்ள பூகம்பமும் அதனால் நிலைதடுமாறி கலங்கி நிற்கும் அரசுத்தரப்பும் மேற்கண்ட பாடல் வரிகளை எமக்கு மீண்டும் நினைவுறுத்துகின்றன.

போர் முடிவுற்றதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள பௌத்த பேரின மக்களின் ஆதரவானது அபரிமிதமாக மேலோங்கி நின்றது. சிங்கள மக்களையும் நாட்டையும் ஒரு காலத்தில் எல்லாள தமிழ் மன்னனின் ஆட்சியிலிருந்து காப் பாற்றியவன் என்று கருதப்படும் துட்டகெமுனு வின் அவதாரம் போல மஹிந்தவை அவர்கள் நோக்கலா னார்கள். அவரது நெருங்கிய சகாக்க ளும் அவ்வாறே அவரை மக்கள் மத்தியில் காட் சிப்படுத்தி வந்தார்கள். அந்த பெரும் கவர்ச்சியில் ஈர்க்கப்பட்ட எதிர் தரப் பிலிருந்த பல கட்சிகளும் உறுப்பினர்களும் சாரிசாரி யாக அரசு பக்கம் தாவினார்கள். அவ்வாறு தாவி யவர்களை ராஜபக்ஷ இருகரம் நீட்டி அரவணைத்துக் கொண்டு அவர்களை மகிழ்வூட்டுவதற்கென பதவி களும் வழங்கினார். இந்த ஆரவாரங்களை சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு அரசமைப் புக்கு 18 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொண்டார். கட்சிமாறி அவருடன் இணைந்து கொண் டவர்களோ கட்சிக்குள்ளேயே இருந்த முக்கியஸ்தர் களோ ராஜபக்ஷவின் இந்தத் தந்திரத்தைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டவர்களும் ராஜபக் ஷவின் செல்வாக்குக் கும் அதிகாரத்துக்கும் அடி பணிந்து பேசாமடந்தைகளாக இருந்து விட்டார்கள்.

காலப்போக்கில்தான் 18 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதன் முழுநோக்கம் அவர்களில் சிலருக் குப் புரிந்தது. கட்சியிலும் அரசுப் பொறுப்புக்களிலும் குடும் பத்தலையீடுகள் அதிகரித்துவிட்டமையும் அவர்களின் உணர்வுகளுக்குப்பட்டது. விழித்துக்கொண்டவர்கள் ஓரங்கட்டப்பட்டார் கள். ஒத்துப் போனவர்களுக்கு பதவிகள் மட்டுமல்ல அவர்கள் புரிந்த ஊழல்கள், குற் றங்கள் கண்டும் காணாமல் விடப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக ராஜபக்ஷ நாட்டு மக் களின் வாக்குரிமையின் சக்தியை விட சோதிடர்களின் எதிர்வுகூறல்களில் அதீத நம்பிக்கை வைத்து காரியம் ஆற்றுவதும் வெளிப்படை ஆயிற்று. அத னால்தான் அவரது இரண்டாவது பதவிக் காலம் முடிவதற்கு இன் னும் இரண்டு ஆண்டுகள் எஞ்சியிருக்கும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துகிறார் என்று குற்றச்சாட்டு எழுந்தது. மக்கள் நலனை விட தனி மனித - தனி குடும்ப நலனில் ராஜபக்ஷ அதிக அக்கறை கொண்டுள்ளார் என்று ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் பகிரங்கமாக குற்றஞ்சாட்டின. அந்த வகையில் சில கோரிக்கைகளை குறிப்பாக அரசமைப்பு சீர் திருத்தங்களை முன்வைத்த அந்தக் கட்சி அதிகார வர்க்கத்தினரோடு பேச்சுக்களையும் நடத்தியிருந்தது. அதெல்லாம் தேர்தலுக்குப் பின் பார்த்துக்கொள்ளலாம் என்பதாக மஹிந்த புறந் தள்ளிவிட்டார். தேர்தலை பின்போடச் செய்வதற்கு எதிர்த்தரப்பினரும் பல்வேறு முயற்சிகளையும் எடுத்து ஓய்ந்த நிலையில் தாம் நினைத்தது போல் ஜனவரியில் தமக்கு அதிர்ஷ்டகரமான காலத்தில் தேர்தலை நடத்து வதற்கான அறிவித்தலை மஹிந்த வெளியிட்டார்.

இந்த நிலைமையில் தான் நேற்றுவரை ராஜபக்ஷ அரசில் முக்கிய பொறுப்பில் இருந்தவரும் சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளருமான மைத் திரிபால சிறிசேன அவரிடமிருந்து பிரிந்து எதிர்த்தரப் பின் சார்பில் அவருக்கு எதிராக பொது வேட்பாளராக களமிறங்க முன்வந்துள் ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவர் களில் ஒருவரும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண் டாரநாயக்க குடும்ப வாரிசும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்தி ரிகா குமாரதுங்க இவற்றுக்கெல் லாம் பின்னணி யில் இருந்துள்ளார் என்பதால் அந்தக் கட்சியில் அடிமட்ட ஆதரவாளர்களில் அனேகரும் சிறிசேனவை ஆதரிப் பது இனி சாத்தி யமாகும். அந்த வகையில் ராஜபக்ஷ அரசுக்கு பெரும் பாதிப்பை இது ஏற்படுத்தும் என்று சொல்லத் தேவையில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட கொள்கை களை யும் செயற்பாடுகளையும் மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரமுறையையே ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற ஆவேசம் கொண்டுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன் றிணையும் பட்சத்தில் ராஜபக்ஷ நிர்வாகம் ஆட்டம் காண்பது திண்ணம்.

இலங்கையில் அரசியல் வானில் எதிர்வரும் நாள்களில் இன்னும் பல அபூர்வ சம்பவக் காட்சிகளை நாம் பார்க்கக் கூடியதாய் இருக்கும் என்று தோன்றுகின்றது. கிரகபலன்கள் எப்படியோ பொறுத்திருப்போம்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வலது கையாகச் செயற்பட்டவர். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டவர். இவ்வாறு பல்வேறு விதங்களிலும், மஹிந்தவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த மைத்திரிபால இன்று பொது எதிரணியின் வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

அவருடன் கூடவே இதுவரை 4 அமைச்சர்கள் சென்றுள்ளனர். இன்னமும் 20 அமைச்சர்கள் வரையில் கட்சி தாவ தயார் நிலையில் இருக்கின்றனர்.

# என்ன வலிக்கின்றதா?

தி.அமுதன்



பாட்ஷா திரைப்படம் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதில் ஒரு காட்சி அமைக்கப்பட்டிருக்கும். ரஜினியும், வில்லன் ரகுவரனும் கூட்டம் நடத்துவார்கள். அதன் பின்னர் அதில் பங்குபற்றிய அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் ரஜினியின் கைக்கு முத்தம் கொடுத்து ஒவ்வொருவராக வெளியேறுவர். இறுதியில் ரகுவரன் கூட ஒருவர் மாத்திரம்தான் இருப்பார். மிகப் பெரிய செல்வாக்குடன், மும்பை தாதாவாக இருந்த ரகுவரன் ஒரு நொடியில் செல்வாக்கை இழந்து விடுவார்.

திரைப்படத்துக்கு இது பொருந்தும். நடைமுறை வாழ்க்கைக்கு இது பொருந்தாது. ஒரே 'சீனில்' அப்படி எவ்வாறு நடக்கும் என்று வெட்டி நியாயம் பேசுவோம். ஆனால் 20 வருடங்களின் பின்னர் அந்தத் திரைப்பட 'சீன்' இலங்கை அரசியலுடன் ஒத்துப் போகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வலது கையாக செயற்பட்டவர். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டவர். இவ்வாறு பல்வேறு விதங்களிலும், மஹிந்தவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த மைத்திரிபால இன்று பொது எதிரணியின் வேட்பாளராக களமிறங்கியுள்ளார். அவருடன் கூடவே இதுவரை 4 அமைச்சர்கள் சென்றுள்ளனர். இன்னமும் 20 அமைச்சர்கள் வரையில் கட்சி தாவ தயார் நிலையில் இருக்கின்றனர்.

> தொடர்ச்சியாக தனக்குச் சாதகமாக காய்களை நகர்த்தி கட்சிகளை உடைத்தெறிந்து கொண்டிருந்த மஹிந்தவுக்கு, இன்று தனது கட்சிக்குள் அதுவே நடக்கும்போது வலிக்கத்தானே செய்யும். ஒவ்வொரு கட்சிகளையும் உடைத்து சுக்குநூறாக்கியவருக்கு, தனது கட்சி இன்று உடைந்து நொருங்கும் போதுதானே அதன் வலி தெரியும்.

மும்பை தாதாவாக இருந்த ரகுவரன் எவ்வாறு பாட்ஷாவில் செல்வாக்கை இழந்தாரோ அதே போல் மஹிந்தவின் செல்வாக்குச் சரிவும் தொடங்கிவிட்டது.

இலங்கை அரசியலில் கட்சி தாவுதல் என்பது காலம் காலமாக நடந்து வருகின்ற ஒரு விடயம். ஆனால் கட்சிகளை இரண்டாக உடைப்பது என்பது புதிய 'ட்ரெண்ட்'. இந்தப் புதிய 'ட்ரெண்ட்' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலேயே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அது இன்று பூமராங்போல முதன் முதலாக மஹிந்தவை தாக்கியிருக்கின்றது.

2004 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மயிரிழையில் வெற்றி பெற்றிருந்தது. அதன் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருந்தார். அப்போது சபாநாயகர் தெரிவுக்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட ஜோசப் மைக்கல் பெரேராவே சபாநாயகராக நியமிக்கப்பட்டார். இந்த அரசு ஆட்டங்காணும் நிலையிலேயே இருந்தது. இவ்வாறானதொரு நிலையில் 2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி கொண்டிருந்தார். இதன் பின்னரே மஹிந்த ராஜபக்ஷ கட்சிகளை உடைக்கும் 'ட்ரெண்டை' அறிமுகப்படுத்தினார்.

2006 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. அந்த உடன்பாட்டில் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு ஒருவரையும் இழுப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதை உடைத்தெறிந்தார் ஜனாதிபதி மஹிந்த. அந்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறிய, மஹிந்த நாடாளுமன்றத்தில் பெரும் பலத்துடன் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்தெறிந்தார். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட உள்ளிட்ட 30 பேர் வரையில் ஒரே தடவையில் கட்சி தாவினர். ஐ.தே.கவின் உடைவு மஹிந்த வால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நாடாளுமன்றில் மிகப் பெரிய மூன்றாவது கட்சியாக இருந்தது. இதனையும் பிரித்தார்-உடைத்தார் மஹிந்த. விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர் மஹிந்தவின் பின்னால் சென்றனர். சோமவன்ச தலைமையிலான குழுவினர் இன்னொரு புறமாகினர்.

ஒவ்வொரு கட்சிகளுக்குள்ளும் புகுந்து அவற்றை உடைத்தார் மஹிந்த. கட்சிகளைப் பலவீனப்படுத்தி தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னை எவரும் எதிர்க்கக்கூடாது என்பதற்காக அவற்றைச் செய்தார். இறுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளும் தனது கைவரிசையைக் காட்டினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவாஜிலிங்கத்தை கட்சியிலிருந்து வெளியேற்றி தனித்து ஜனாதிபதித் தேர்தல் கேட்க வைத்தார்.

தொடர்ச்சியாக தனக்குச் சாதகமாக காய்களை நகர்த்தி கட்சிகளை உடைத்தெறிந்து கொண்டிருந்த மஹிந்தவுக்கு, இன்று தனது கட்சிக்குள் அதுவே நடக்கும் போது வலிக்கத்தானே செய்யும். ஒவ்வொரு கட்சிகளையும் உடைத்து சுக்குநூறாக்கியவருக்கு, தனது கட்சி இன்று உடைந்து நொருங்கும் போதுதானே அதன் வலி தெரியும்.

தற்போதைய சூழலில் ஜனாதிபதி மஹிந்தவை வீழ்த்துவதற்கு பொருத்தமான எதிரணி இல்லை. எதிரணியினால் எந்தப் பொதுவேட்பாளரையும் நிறுத்தி மஹிந்தவை தோற்கடிக்கும் நிலையும் இல்லை. எனவே இருந்தது ஒரே வழிதான். ஆளுங்கட்சியைப் பலவீனப்படுத்துவதன் ஊடாக தாம் வெல்லுவது மாத்திரம்தான்.

அதைத்தான் எதிரணிகள் கூட்டாகச் செய்திருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், ஜனாதிபதி மஹிந்த ஒரு வேட்பாளர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால இன்னொரு ஜனாதிபதி வேட்பாளர். கட்சியின் இரு பெரும் துருவங்களையே நேருக்கு நேர் மோத விட்டிருக்கின்றன எதிரணிகள். வலியைத் தந்தவனுக்கே வலியைத் திருப்பிக் கொடுப்பது இப்படித்தான்.

மறவன்

# சாவைத் தோளில் தாங்கி வாழ்ந்தோர் நினைவு - 4

இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையில்தான் அவர்களின் நினைவாக முதல் முதலில் குறித்த நாளும் அதற்கான செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன. விடுதலைக்காக உயிரை ஈகம் செய்தவர்களைப் போற்றுவதே ஒரே நோக்கம். 1989ஆம் ஆண்டு முதன் முதலில் அடர்ந்த காடுகளின் இடையே கடைப்பிடிக்கப்பட்ட இந்த நாள், 1990ஆம் ஆண்டு முதல் அனேகமாக எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இது ஒரு சோக நிகழ்வு அல்ல, ஒரு தேசத்தின் மலரும் நினைவுகள். ஈகங்களைப் போற்றும் நிகழ்வு. அவர்கள் நம்பிய விடுதலைக்காக அவர்களுக்குத் தெரிந்த போராட்ட வழியிலே பயணித்தவர்களின் நெஞ்சுரத்தையும் விடுதலைத் தாகத்தையும் போற்றித் துதிக்கும் நிகழ்வு. அவர்களின் கனவுகளை நனவாக்குவதாகக் கூட இருந்தவர்களும் ஏனையவர்களும் உறுதியெடுத்துக்கொண்ட நிகழ்வு. அந்த உறுதியை அவர்களுக்குச் சத்தியமாய் செய்து கொடுக்கும் நிகழ்வு.

அவர்கள் தங்கள் கடமையை முடித்து விட்டார்கள். அதனைத் தொடர்வது எஞ்சியிருப்பவர்களின் கைகளில் என்று திடவுறுதி எடுத்துக் கொண்டவர்களின் நாள்கள் இவை. அதற்கான இடங்களும் பொழுதுகளும் ஒரு காலத்தில் எமக்கிருந்தன.

இப்போது அவை இல்லை. ஆனால் எல்லோர் நெஞ்சங்களிலும் அவர்களுக்கான இடம் அப்படியே இருக்கின்றது.



உடலை அழிப்பவர்களால் ஆன்மாவை அழிக்க முடிவதில்லை என்பது சித்தர்கள் வாக்கு. தூபிகளையும் கட்டடங்களையும் அழிக்க முடிந்தவர்களால் நினைவுகளை ஒருபோதும் அழிக்க முடியாது என்பதும் திண்ணம்.

வடமராட்சி கம்பர்மலை என்னும் கிராமத்தைச் சேர்ந்த சத்தியநாதன் என்ற சங்கர் உயிரை ஈகம் செய்த நாளே இந்த வாரத்தின் உச்ச அடிநாதம். அந்த ஈகத்தின் ஏழு ஆண்டுகள் கடந்த பின்னரே முதல் நினைவு நாள் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் இறுதித் தமிழன் இந்த உலகில் உயிருடன் உள்ள வரை அந்த நினைவுகளை எவராலும் அழிக்கவோ முடக்கவோ முடியாது.

### இது மரநடுகை மாதம்

## ஆளுக்கு ஒரு மரம் நடுவோம்



விவேகானந்தநகர் சதீஸ்

மரங்களை நடுவோம்
மக்களைக் காப்போம்
இன்று விதைக்கும் விதைகள் – எந்
நாளும் வழங்கும் பயன்கள்!
காணி நிலம் சேர்ந்திட
காடுகளை அழித்து –நாளை
காணாமற் போக்கிடாதீர்
மானிடர் இனத்தவரே
இன, மத பேதமின்றி
வனவளம் காத்திடுவோம்
போர் தின்ற பனைகளை
நாம் மீண்டும் நடுவோம்
சுயநல தேவைக்காய்
சொந்த மண்ணை
சுடு காடாய் மாற்றிடாதீர்
வரும் கால சந்ததி
இடுகாட்டில் வாழ –நீவீர்
வழி காட்டிடாதீர்!
மூன்று அரை சதாப்த கால மதில்
மண் தின்ற விதைகள் ஏராளம்
மரணித்த மரங்கள் தாராளம்
கார்த்திகை கால மதில்
நாடு வளம் பெற
காடு வளர்த்திடுவோம்!
மீள் உருவாக்குவோம்.
மீள் நடுகை திட்டம் அதில்
ஆளுக்கு ஒரு மரம் நடுவோம்
நாளுக்கு ஒரு வரம் பெறுவோம்
வட மண்ணின் பசுமை புரட்சி
வளமான வாழ்வின் எழுச்சி!

வாசகர் திருமுகம்

## மனிதக் குப்பை அகற்றப்படுமா?

யாழ்.மருத்துவமனையின் முன்னுள்ள நடைபாதையில் ஒரு கால் அற்றவர் தோற்றத்தில் மிகவும் அழுக்கான நிலையில் காணப்படுவார். பிச்சையெடுப்பதுதான் அவரது நோக்கமாகப் புரியவில்லை.

ஏனெனில் நடை பாதைகளுக்குக் குறுக்காக அமர்ந்து கொண்டு அந்த வழியால் நடந்து செல்லும் பெண்கள் மீது மிகவும் கேவலமான செந்தமிழ் வார்த்தைகளை உதிர்த்த வண்ணம் இருப்பார். கேட்கத்தகாத காது கூசும் படியான வார்த்தைகளாக அவை காணப்படும். பெரும்பாலும் மதிய வேளைகளில் அதாவது பாடசாலை முடியும் வேளைகளில் இது நிகழ்ந்த வண்ணம். இருக்கும். முன்னர் இது போன்ற தகாத வார்த்தைகளை கேட்டிராத பாடசாலை மாணவிகள், இளம்பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இது இன்று நேற்றல்ல பலமாதங்களாக நான் அவதானித்து வரும் ஒன்று.

ஆனால் எவரும் இதைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. வீதியில் கிடக்கும் குப்பைகளை எவ்வாறு அப்புறப் படுத்துவோமோ, அதுபோல தகாத வார்த்தை வீசிவரும் அந்த மனிதக் குப்பையை அகற்ற வழிவகை செய்யுமாறு மிகமிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*யாழ்தர்ஷி.*

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

**அப்பாவுக்காக இந்தச் சதம்**

இதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்த தந்தைக்காக மது அருந்த சச்சின் அவரின் இறுதிக் காலத்தில் துணை நின்றார். அவர் இறந்த போது அப்பாவின் அருகில் அம்மா இருந்தபடியால் அவரை ஆறுதல்படுத்தி மௌனம் காத்தார். வெகுநாள்கள் கறுப்புக் கண்ணாடி அணிந்து கண்ணீர் வடிந்த, சிவந்த தன் முகத்தை மறைத்துக்கொண்டு உலகக் கோப்பையில் அடித்த சதம் அப்பாவுக்குச் சமர்ப்பணம் ஆனது.



மீண்டும் அணியின் தலைவர் ஆனார் சச்சின். அவர் அதற்குத் தயக்கம் தெரிவித்தாலும் தேர்வுக்குழு சச்சினோடு பேசிய அஜித் வடேகரோடு கலந்தாலோசித்து அந்த முடிவை எடுத்தது. அப்போது சச்சினின் மகன் அர்ஜுன் பிறந்திருந்தான். அந்தச் சுட்டி சச்சின் வெளி நாடுகளில் ஆடும் பொழுது போனில் பேசவே மாட்டானாம். சச்சின் வீட்டுக்கு வந்தால் மூன்று நாள்களுக்கு அவருடன் சுற்றி அந்த நேவை பழமாக மாற்றிக்கொள்வாராம் ஜூனியர் சச்சின்.

அணித் தலைவரான முதல் போட்டியில் அணி 83 ரன்களுக்கு டோனி நாஷின் பந்து வீச்சில் சுருண்டு சொதப்பியது. அதற்கு ஈடுகட்டும் வகையில் இரண்டாவது இன்னிங்ஸில் அணி 500 ரன்கள் அடித்தது. அதில் டிராவிட், சச்சின் கலக்கினார்கள். அவர்கள் ஒரு சாதுரியமான செயல் புரிந்தார்கள். கிறிஸ் கெயின்ஸ் அபாரமாகப் பந்து வீசிக்கொண்டு இருந்தார்.

**கூட்டணி போட்டு ஏமாற்றிய சச்சின்-டிராவிட்**

கிறிஸ் பந்தின் திசையைத் தெரியாமல் கையால் மறைத்து வீசிக்கொண்டிருந்தார். ஆகவே சச்சினோ, டிராவிடோ பந்து வெளியே போகும் என்றால் இடது கையில் மட்டையையும் உள்ளே வரும் என்றால் வலது கையிலும், சரியாகச் சொல்ல முடியாவிட்டால் இரண்டு கையிலும் மட்டையைப் பிடித்துக்கொள்வது என்று சிக்னல் வைத்துக்கொண்டார்கள். அப்படியே செய்து அவரைக் காயவிட்டார்கள். இவர்கள் எதோ சூழ்ச்சி செய்கிறார்கள் என்று உணர்ந்த கிறிஸ் பந்தை மாற்றி டிராவிடுக்கு வீசிவிட்டுச் சச்சினை நோக்கி திரும்பினார். ஏற்கனவே சிக்னல் கொடுத்துவிட்டு சச்சின் நல்ல பிள்ளையாக அமைதி காத்தார்.

இரண்டாவது முறை அணித் தலைவராக இருந்த காலத்தில் கபில் தேவ் அணியின் பயிற்சியாளராக இருந்தார். அவர் அணியை நடத்துவது அணித் தலைவரின் வேலை என்று முக்கியமான முடிவு களில் இருந்து ஒதுங்கியே இருந்தார் என்று ஒரு வரியில் சச்சின் சொல்லிவிட்டு கடந்து போகி றார். அதே சமயம் அதற்கு முன்னால் இந்தியா கண்ட மிகச்சிறந்த வீரர்கள் மற்றும் ஆல் ரவுண் டர்களில் அவர் முதன்மையானவர் என்று சொல்லிவிட்டே இந்த வருத்தத்தைப் பதிகிறார்.

(தொடரும்)

## இன்று ஆரம்பமாகிறது குளிர்காலக் கூட்டத்தொடர்

டில்லி, நவ.24
நாடாளுமன்ற குளிர் காலக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதில் பல்வேறு பிரேரணைகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதையடுத்து, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் குறித்து, மக்களவைசபாநாயகர் சுமித்ரா மகாஜன் தலைமையில் நேற்றுமுன்தினம் அனைத்துக் கட்சி கூட்டம் டில்லியில் நடைபெற்றது. அப்போது, நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரைச் சுமுகமாக நடத்த ஒத்துழைப்பு தருமாறு அனைத்து கட்சியினருக்கும் சபாநாயகர் சுமித்ரா மகாஜன் வேண்டுகோள் விடுத்தார்.
மேலும், இந்தக் கூட்டத் தொடரின் போது, பல்வேறு பிரேரணைகளை நிறைவேற்றவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. (வ)



## கணவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன்

### பிரதமர் மோடியின் மனைவி கருத்து

மும்பை, நவ.24
"கணவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன்" என்று தெரிவித்தார் பிரதமர் மோடியின் மனைவி.
பிரதமர் நரேந்திர மோடியின் மனைவி ஜசோதா பென் கடந்த 43 ஆண்டுகளாக அவரைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார்.
கடந்த 1968 ஆம் ஆண்டு இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. மூன்று ஆண்டுகள் மட்டுமே கணவர் வீட்டில் வசித்து வந்த அவர் பின் தந்தை வீட்டுக்குச் சென்று ஆசிரியர் பயிற்சி முடித்து குஜராத் மாநிலம், வட்காம் மாவட்டத்தில் உள்ள ரஜோசனா கிராமத்தில் ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றினார்.
கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் பணியில் இருந்து ஓய்வு பெற்ற இவர் தொடர்ந்து 43 ஆண்டுகளாகக் கணவர் மோடியைப் பிரிந்தே வாழ்ந்து வந்தார்.
இந்த நிலையில் மும்பையில் வசிக்கும் தனது உறவினர் ஒருவரைப் பார்ப்பதற்காக வந்திருந்த அவர், நேற்று முன்தினம் அங்கிருந்து குஜராத் புறப்பட்டுச் சென்றார். அதற்கு முன்பு அவர் அளித்த பேட்டியில்,
"கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசை இப்போதும் எனக்கு இருக்கிறது. இருப்பினும் அதற்கான அழைப்பு அவரிடம் இருந்து வரவேண்டும் அவர் அழைத்தால் மட்டும் தான் செல்வேன்" என்று கூறினார். (வ)

## விரிவுபடுத்தப்படுகிறது இந்திய ராணுவ பலம்


### 28 வருடங்களின் பின்னர் 814 பீரங்கிகள் வாங்க அனுமதி



டில்லி, நவ.24
இந்திய இராணுவத்துக்கு ரூ.14,750 கோடியில் 814 பீரங்கிகள் வாங்கும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 100 பீரங்கிகள் வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும். மீதமுள்ள 714 பீரங்கிகள் உள்நாட்டில் தயாரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக் கர் தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்புத்துறை கொள் முதல் சபை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட் டது.
இந்திய இராணுவத்துக்கு 1986 ஆம் ஆண்டு போபர்ஸ் பீரங்கிகள் வாங்கப்பட்டன. அதில் பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் நடைபெற்றதாகச் சர்ச்சை எழுந்தது. அதைத் தொடர்ந்து பீரங்கிகள் வாங்குவதற் கான முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை.
தற்போது இராணுவத்துக்கு 814 பீரங்கிகளை ரூ.14,750 கோடி திட்ட மதிப்பீட்டில் வாங் கும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 100 பீரங்கிகளை வெளி நாட்டில் இருந்து கொண்டு வரலாம். மீதமுள்ள 714 பீரங்கிகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட வேண்டும். இதில் இந் திய நிறுவனாங்களும் பங் கேற்கலாம். அதன்படி எல் அண்ட் டி, டாட், பாரத் போர்ஜ் ஆகிய நிறுவனங்கள் பங்கேற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனிடையே டாடா சன்ஸ், ஏர்பஸ் நிறுவனம் இணைந்து விமானப்படைக்கு 56 போக்குவரத்து விமானங்களைத் தயாரிக்கும் ஒப்பந்தம் குறித்தும், 106 பயிற்சி விமானங்கள் வாங்குவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை.
மேலும் சில தகவல்கள் தேவைப் படுவதால் அவற்றில் முடிவெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ)

## 2014 இற்கான கண்டுபிடிப்பு பட்டியலில் மங்கள்யான்

நியூயோர்க்.நவ.24
இந்த வருடத்துக்கான சிறந்த கண்டுபிடிப்புகள் பட்டியலில் மங்கள்யான் இடம்பிடித்துள்ளதாக 'டைம்' பத்திரிகை பாராட்டுத் தெரிவித்துள்ளது.
செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), கடந்த ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி அனுப்பிய மங்கள்யான் விண்கலம், கடந்த செப்ரெம்பர் 24 ஆம் திகதி செவ்வாயின் சுற்று வட்டப்பாதையில் நுழைந்து சரித்திர சாதனை படைத்தது.
இந்தியாவின் முதல் முயற்சியிலேயே வெற்றியடைந்த மங்கள்யானுக்கு தற்போது மற்றொரு சிறப்பும் கிடைத்துள்ளது.
இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட மிகச்சிறந்த 25 கண்டுபிடிப்புகள் என டைம் பத்திரிகை வெளியிட்டுள்ள பட்டியலில் மங்கள்யானும் இடம்பிடித்துள்ளது.
இதுகுறித்து அந்தப் பத்திரிகை



வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,
செவ்வாய்க் கிரக ஆய்வில் முதல் முயற்சியில் யாரும் வெற்றி பெறவில்லை. அது அமெரிக்காவால் முடியவில்லை. ரஷ்யாவால் முடியவில்லை. ஐரோப்பியர்களால் முடியவில்லை. ஆனால் இந்தியா அதை செப்ரெம்பர் 24 ஆம் திகதி சாதித்துக் காட்டியது என்று கூறப்பட்டுள்ளது.
செவ்வாய் சுற்றுவட்டப் பாதையில் மங்கள்யான் நுழைந்தது ஒரு தொழில்நுட்ப சாதனை என்று கூறியுள்ள அந்த பத்திரிகை, இதை வேறு எந்த ஆசிய நாடும் இதுவரை சாதித்தது இல்லை என்றும் கூறியுள்ளது. மேலும் மங்கள்யான் ஒரு 'சூப்பர் ஸ்மார்ட் விண்கலம்' என்றும் அதில் வர்ணிக்கப்பட்டு உள்ளது. (வ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
செல்வி
பிரதீபன் திஷங்கா
அவர்களைப் பாராட்டி மேன்மேலும் பல பல பட்டங்களைப் பெற்று உயர்வடைய வாழ்த்தி அவரோடு பாடசாலையில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம். அவர்களுக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்திற்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்
கன்னாதிட்டி காளி கோயிலடியைச் சேர்ந்த ஸ்ரீ கந்தசர்மா மகாலட்சுமி தம்பதியரின்
செல்வப்புதல்வி அஸ்வினி
இன்று தனது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவதுடன், புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ச.சோமாஸ்கந்தக்குருக்கள்.
பொன்னாலை.
(41471)(4.3.6)

மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



திருமதி யசோதரா சந்திரலிங்கம்
(பகுதித்தலைவர்)
எமது கல்லூரியின் ஆசானாய்!
ஆளுமைமிக்க பகுதித்தலைவராய்!
மாணவர் நலனில் பங்காளியாய்!
இருபத்து மூன்று வருடங்கள் சேவை புரிந்து அறுபதாம் அகவையில் ஓய்வு பெறும் (24.11.2014) அன்னைக்கு வாழ்த்துக்கள் பல கூறும்
நலன்புரிக்கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
(41410)(4.3.6.)

பாராட்டி வாழ்த்து



யா/சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
2014 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அரியாலையைச் சேர்ந்த சசிதரன் சுஜிதமலர் தம்பதியரின் புதல்வன் சுலக்ஷிகன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
Congratulation
வாழ்த்துவோர்:
குடும்பத்தினர், நல்லூர்.

மணமகள் தேவை
77 ஆம் ஆண்டு, திருவோணம், செவ்வாய் இல்லை, லண்டன் சிற்றிசன், உயர் தொழில் மணமகனிற்கு படித்த அழகிய மணமகள் தேவை. மணமகன் வந்துள்ளார்.
தொடர்பு: துர்க்கா திருமண சேவை
077 818 5978, 021 321 1814

மணமகள் தேவை
62 ஆம் ஆண்டு சுவாதி செவ்வாய் அற்ற திருமணம் செய்யாத ஆஸ்திரேலியா சிற்றி சன் மணமகனுக்கு மணமகள் தேவை. மண மகன் வந்துள்ளார்.
தொடர்பு: துர்க்கா திருமண சேவை
077 818 5978, 021 321 1814 (41470)(4.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன்
செல்வன் உலகராசா ஹரிப்பிரியன்
2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.
அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.
Congratulation
விவேகானந்தா ச.ச.நிலையம், வாழ்த்துவோர்:
கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு தவசி இராசதுரை குடும்பம்

# சீன ரகசிய அரச ஆவணங்களை அம்பலமாக்கிய பத்திரிகையாளர்

பீஜிங், நவ.24
சீனாவில் அரசு ஆவணங்களைத் திருடி பெண் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படவுள்ளது.





சீனாவை சேர்ந்த காவ் யு (வயது-70) என்ற பெண் பத்திரிகையாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய தலைமை இரகசிய ஆவணங்களைத்திருடி வெளிநாட்டு இணையத்தளத்தில் வெளியிட்டதாக கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். கைதான 2 வாரங்களுக்குப் பின்னர் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றிய அவர் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டார். ஆனால் இது தொடர்பாக அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்த போது, தொலைக்காட்சியில் கூறிய வாக்குமூலத்தை முற்றிலுமாக மறுத்துள்ளார்.
மேலும் தனது மகன் ஜாவோ மெங் ஏப்ரல் மாதம் உயிரிழந்ததில் இருந்து தான் மன அழுத்தத்தில் இருப்பதாக கூறி விடுதலை பெறமுயற்சித்து வருகிறார். (வ)

# பஸ் மீது தாக்குதல் 28 பேர் உயிரிழப்பு

## சோமாலிய எல்லையில் பயங்கரம்



நைரோபி, நவ.24
சோமாலியாவைச் சேர்ந்த அல் - ஷபாப் பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலர் வடக்கு கென்யாவில் ஒரு பஸ் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியதில் குறைந்தது 28 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
துப்பாக்கி ஏந்திய ஆயுததாரிகள் வீதி ஓரமாகப் பஸ்ஸை நிறுத்தி, இஸ்லாமியர் அல்லாதவர் என்று தங்கள் நினைத்தவர்களைப் பிரித்து சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கென்யத் தலைநகர் நைரோபியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த குறித்த பஸ், சோமாலிய எல்லைக்கு அருகில் உள்ள மந்தேரா கவுன்டிக்கு அருகில் நிறுத்தப்பட்டு, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
சோமாலியாவிலிருந்து இயங்கி வரும் அல் - ஷபாப் இயக்கம் 2011ஆம் ஆண்டிலிருந்து கென்யாவில் பல தாக்குதல்களை நடத்தியுள்ளது.
இஸ்லாமிய பயங்கரவாதிகளுடன் போரிடுவதற்காக 2011 ஆம் ஆண்டில் கென்யா தனது படைகளை சோமாலியாவுக்கு அனுப்பியது.
இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களில் வடகிழக்கில் இருக்கும் மந்தேரா பகுதிதான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.
இந்தத்தாக்குதல் சனிக்கிழமை அதிகாலையில் நடைபெற்றது. கூடுதலாகப் பாதுகாப்பு வேண்டும் என்று கோரியும் கென்ய அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்ததாக கென்ய ஊடகங்கள் கூறியுள்ளன. பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்ட பயணிகள் குரானிலிருந்து சில வாசகங்களைப் படிக்கச் சொல்லி கேட்கப்பட்டதாகவும், அவ்வாறு படிக்க இயலாதவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் ஒரு அதிகாரி தெரிவித்ததாகக் கென்யாவின் டெய்லி நேஷன் செய்தித்தாள் கூறியுள்ளது. (வ)

# கடலுக்கு அடியில் அதிநவீன நகரம்

## அமைக்கிறது ஜப்பான் நிறுவனம்

டோக்கியோ, நவ.24
ஜப்பானில் ஷிம்சு என்ற கட்டுமான நிறுவனம் கடலுக்கு அடியில் அதிநவீன நகரத்தை கட்டப் போவதாக அறிவித்துள்ளது.
1500 அடி அகலத்தில் வட்ட வடிவிலான கூண்டு அமைக்கப்படுகிறது. அதற்குள் வீடுகள், விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. அங்கு 5 ஆயிரம் பேர் தங்கும் வகையில் அது வடிவமைக்கப்படுகிறது. இதற்கு 'அட்லாண்டிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
இந்த ஆழ்கடல் அதிநவீன நகரம் கட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இது 2030 ஆம் ஆண்டுக்குள் அதிநவீன தொழிலநுட்பத்துடன் கட்டப்படும் என்று ஷிம்சு கட்டுமான நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (வ)

# அசாஞ்சேக்கு தொடர்ந்து தஞ்சம் அளிப்போம்

## ஈக்வடார் அரசு அறிவிப்பு



விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேக்கு தொடர்ந்து தஞ்சம் அளிப்போம் என்று ஈக்வடார் அரசு அறிவித்துள்ளது.
அசாஞ்சேக்கு பாதுகாப்பான இடம் கிடைக்கும் வரை ஈக்வடார் தூதரகத்திலேயே தங்கலாம்என்று ஈக்குவடார்வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் சுவீடன் அதிகாரிகள் அசாஞ்சேயிடம் காணொலி தொடர்பாடல் மூலம் விசாரணை நடத்திக் கொள்ளலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியல் துன்புறுத்தல் தொடர்பான வழக்கில் கடந்த 2010 ஆம் ஆண்டு சுவீடன் நீதிமன்றம் அசாஞ்சேக்குப் பிடி ஆணை பிறப்பித்து உத்தரவிட்டது. இதனை எதிர்த்து அசாஞ்சே தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சுவீடன் நீதிமன்றம் நேற்று முன்தினம் இரத்துச் செய்தது. (வ)

# ஸிம்பாப்வேயில் நெரிசலில் சிக்கி 11 பேர் சாவு

ஸிம்பாப்வே நாட்டில் உள்ள தேவாலய அரங்கம் ஒன்றில் இடம்பெற்ற மத கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஸிம்பாப்வே வெக்வீ எனும் இடத்தில் உள்ள புனித தேவாலய அரங்கம் ஒன்றில் மத வழிபாட்டுக் கூட்டம் ஒன்று நிகழ்ந்துகொண்டிருந்தது. அவ்வேளை ஆயிரக்கணக்கான மக்கள் பிரார்த்தனை முடிந்து வெளியேற முற்பட்ட போது பெரும் நெரிசல் ஏற்பட்டது. அந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி 11பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அந்த அரங்கத்தைச் சுற்றி நின்றிருந்த பொலிஸார் அரங்கத்தின் பல வெளிவாயில்களைத் தடுத்து வைத்திருந்ததாகவும் ஒரேயொரு வாயில் மூலமாகவே மக்கள் வெளியேற முடிந்ததாகவும் நேரில் பார்த்த மக்கள் தெரிவிப்பதாக அறியப்படுகிறது. (வ)

# சீனாவில் நிலநடுக்கம் இருவர் உயிரிழப்பு

பீஜிங், நவ.24
சீனாவின் மேற்குப் பகுதியில் உள்ள மலைப்பாங்கான இடத்தில் நிகழ்ந்த கடும் நிலநடுக்கத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 54 பேர் காயமடைந்தனர்.
சிச்சுவான் மாகாணத்தில் உள்ள நகரமான காங்டிங்கிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் 5.9 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவித்த நிலையில், சீன புவியியல் ஆராய்ச்சி மையம் 6.3 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
அந்தப் பகுதியில் இரண்டு வீடுகள் முற்றிலும் இடிந்து விழுந்துள்ளதாகவும், மேலும் பல வீடுகள் மற்றும் ஏராளமான கட்டடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
நிலநடுக்கத்தால் அந்த நகரத்தில் உள்ள உள்நாட்டு விமான நிலையம் சேதமடைந்துள்ளது. (வ)



# குர்திஷ் படையுடன் இணையும் அயல்நாட்டு ராணுவ வீரர்கள்

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை அழித்தொழிக்க

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க குர்திஷ் படைகளுடன் அயல் நாட்டு இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.
ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ், கடந்த சில தினங்களாக சிரியாவின் எல்லைப் பகுதியில் உள்ள கோபேனி நகரை கைப்பற்ற மும்முரமாக உள்ளது.
இந்த நிலையில் தீவிரவாதிகளை எதிர்த்து அப்பகுதியில் வசிக்கும் குர்திஷ் படையினரும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (வ)

# ஒபாமாவின் புதிய நடைமுறைக்கு அமெரிக்க குடியரசு கட்சி எதிர்ப்பு

வொஷிங்டன், நவ.24
அமெரிக்காவில் சட்ட விரோதமாகத் தங்கியிருப்போர் தொடர்பில் ஜனாதிபதி பராக் ஒபாமா புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தார். இந்த புதிய நடைமுறைக்கு அமெரிக்க குடியரசு கட்சி கண்டனத்தை வெளியிட்டுள்ளது.



அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இன்றி சட்ட விரோதமாக குடியேறியவர்களில் 47 லட்சம் பேருக்கு சட்டபூர்வ அந்தஸ்து அளிக்கப்படும் என்று ஜனாதிபதி ஒபாமா கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார்.
இதுகுறித்து அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகரும், குடியரசு கட்சியைச் சேர்ந்த வருமான போஹ்னர் கருத்து வெளியிடுகையில்;
சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு சட்டபூர்வ அந்தஸ்து அளிப்பதென்பது இரு கட்சிகளும் சேர்ந்து எடுக்கக் கூடிய முடிவுகளை பயனற்றதாக்கும் செயலாகும்.
இந்த விடயத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வராமல் ஒபாமா தனது அதிகார வரம்பை மீறி இருக்கிறார். இது எதிர்காலத்தில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமையும்.
இந்தப் பிரச்சினையில் தொடக்கம் முதலே எதிர்க்கட்சியான குடியரசுகட்சியுடன் இணைந்து செயற்பட ஒபாமா விரும்பவில்லை. ஒபாமாவின் இந்த அறிவிப்பை எதிர்த்து குடியரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக போராடுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மனிதனின் இறப்பை கணிக்கும் பூனை


வொஷிங்டன், நவ.24
அமெரிக்காவில் பூனை ஒன்று மனிதனின் இறப்பை கணித்துச் சொல்வது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்காவில் உள்ள ரோட் தீவில் வசிக்கும் டேவிட் என்ற மருத்துவர், கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு பூனை ஒன்றை தத்தெடுத்து அதற்கு ஆஸ்கர் என்று பெயரிட்டு வளர்த்து வருகிறார்.



அந்த மருத்துவமனையில் உள்ள நோயாளிகளின் இறப்பை முன்கூட்டியே அறிந்து சொல்லும் அபூர்வ சக்தியை இந்தப் பூனை கொண்டுள்ளது என டேவிட் கூறியுள்ளார்.
அதாவது இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும் நோயாளிகளின் அறைகளுக்கு ஆஸ்கர், இப்படியும் அப்படியும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, ஒரு நோயாளியின் அருகில் போய் நிற்கிறது. அதன்பின் சில மணி நேரங்களில் அந்த நோயாளி இறந்து விடுகின்றார்.
மேலும் ஆஸ்கரை பற்றி டேவிட் புத்தகம் ஒன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். (வ)

# 3டி பிரிண்ட் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட கை

இத்தாலியைச் சேர்ந்த தொழில்நுட்ப வடிவமைப்பாளர் ஒருவர் 3டி பிரிண்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயோனிக் கை ஒன்றை உருவாக்கி யுள்ளார். YouBionic என்று அழைக்கப்படும் இக்கையானது விசேட மென்பொருள் ஊடாக கட்டுப்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விரல்களை இழந்தவர்கள் இந்தக்கையைப் பொருத்தி அதனை ஸ்மார்ட் கைபேசிகளின் உதவியுடன் கையாள முடியும். மேலும் இந்தக் கையை இயக்குவதற்கான மென்பொருளின் அப்டேட்களை காலத்துக்கு காலம் வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## இளமைக் காலத்தில் நல்லவற்றை பெற்றுக் கொள்ளுங்கள்

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



இளமைக் காலத்தில் நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயற்பட்டால் தூய்மை பெறுவோம். நாம் இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நம்மாலேயே உருவாக்கிக் கொள்ள முடியும். புது மலர்களே இறைவனின் பாதங்களில் இடுவதற்கு தகுதி பெற்றவை. அதுபோல வலிமை, வளமை, அறிவுக்கூர்மை கொண்ட இளமைக் காலத்திலேயே இறைவனை அறிய முயலுங்கள். ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும். மேலை நாட்டு அறிவியல் நுட்பத்தோடு வேதாந்த கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் முழுமை பெற முடியும். இலட்சியமில்லாதவன் இருட்டான பாதையில் தடுமாறி சென்று கொண்டிருப்பான். எனவே, குறிக்கோளை ஏற்று வாழ்வு நடத்துங்கள். மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்துக்குக் கூட செல்வதற்குத் தயாராய் இருங்கள். சாவு வருவது உறுதியாக இருக்கும் போது ஒரு நல்ல காரியத்துக்காக உயிரை விடுவது மேல். உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது. உலகவாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள். பாமரன் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவன் தெய்வமாகவும் உயரவேண்டும். இதுவே ஆன்மிகத்தின் பயன். தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ் நிலைக்குத் தள்ளிவிடும். சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறு எந்த விதமான வேறுபாடும் கிடையாது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 8 | | |
| | 2 | | 1 | | | 6 | 4 | 3 |
| | 9 | 5 | | 4 | 3 | | 1 | |
| | | | 5 | | | | 6 | 8 |
| | 5 | 7 | | 2 | | 4 | 3 | |
| 4 | 1 | | | | 8 | | | |
| | 8 | | 6 | 9 | | 3 | 7 | |
| 1 | 6 | 3 | | | 2 | | 9 | |
| | | 9 | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 6 | 4 | 7 | 1 | 8 | 2 | 5 |
| 7 | 8 | 5 | 9 | 3 | 2 | 6 | 4 | 1 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 5 | 9 | 3 | 7 |
| 8 | 7 | 4 | 6 | 5 | 3 | 1 | 9 | 2 |
| 6 | 3 | 1 | 2 | 9 | 7 | 4 | 5 | 8 |
| 2 | 5 | 9 | 1 | 8 | 4 | 3 | 7 | 6 |
| 9 | 2 | 7 | 3 | 1 | 6 | 5 | 8 | 4 |
| 5 | 6 | 3 | 7 | 4 | 8 | 2 | 1 | 9 |
| 4 | 1 | 8 | 5 | 2 | 9 | 7 | 6 | 3 |



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்கப் பெறுவார்கள். புதிய பொறுப்புகள் வரும். கணவன் மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். வராது என்று நினைத்த பொருள் வந்து சேரலாம்.

**இடபம்**: வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. காரியங்களைச் செய்து முடிப்பதில் கடினமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்க பாடுபட வேண்டி இருக்கும்.

**மிதுனம்**: மனதில் உறுதி பிறக்கும். எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும்.

**கடகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும். பொறுப்புடன் செயலாற்றுவது நல்லது. குடும்ப நிம்மதி குறையக்கூடும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**சிங்கம்**: எதிர்பார்த்த காரியங்கள் நடந்து முடியும். செலவு அதிகரிக்கும். பயணம் செல்ல நேரலாம். பொறுப்புகள் கூடும். வீண் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வீண் பகை உண்டாகலாம். தீ, ஆயுதங்களைக் கையாளும்போது கவனம் தேவை.

**கன்னி**: நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கௌரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண்அலைச்சல். கூடுதல் உழைப்பும் இருக்கும்.

**துலாம்**: குடும்பத்தில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் ஏற்படலாம். பிள்ளைகள் பற்றிய கவலை உண்டாகும். சகோதரர்கள், தந்தையிடம் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். எதிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

**விருச்சிகம்**: தன்னம்பிக்கை வளரும். பண வரவு திருப்தி தரும். வாக்கு வன்மை அதிகரிக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். குடும்பத்தில் சந்தோசம் நிலவும்.

**தனுசு**: தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும்.

**மகரம்**: தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும்.

**கும்பம்**: குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த தனவரவு கிடைக்கும். உங்கள் சொல்லுக்கு அலுவலகத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கும். நண்பர்கள் மூலம் அனுகூலம் கிட்டும்.

**மீனம்**: எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் செலவு ஏற்படும். உடற்சோர்வு மனசோர்வு வரலாம். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது.

**நாளை**

கார்த்திகை-09 செவ்வாய்க்கிழமை | 25.11.2014

திதி: திருதியை பி.ப.03.06 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.47 வரை

சுபநேரம்:10.42-12.12வரை
இராகுகாலம்: 03.12-04.42 வரை

# ஜக்சன் அடித்தார் அதிரடி கோல் சென்.மேரிஸ் வசம் கிண்ணம்

## தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மைலோ தொடரில் வெற்றி







யாழ்ப்பாணம், நவ. 24

ஜக்சனின் அதிரடி ஆட்டம் மற்றும் கோல்காப்பாளர் சுதர்சனின் அபாரத் திறமையின் மூலம் இரண்டாவது முறையாக மைலோ கிண்ணத்தை தன் வசமாக்கியது நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

மைலோ கிண்ண இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது நாவாந்துறை சென்.மேரிஸ். அரையிறுதி ஆட்டத்தில் பலம் மிக்க பாடும்மீன் அணியை சாதுரியமாகத் தோற்கடித்து இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தது கலைமதி. இதனால் ஆட்டம் பலத்த எதிர்பார்ப்புக்குள்ளாகி இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் முன்னேறித் தாக்குவதில் தீவிரமாக இருந்தன இரு அணிகளும். இதனால் தடுப்பாட்டம் இரு பக்கங்களிலும் பலத்த சவாலாக இருந்தது. இந்த அழுத்தம் கலைமதியைத் தவறு செய்ய வைத்தது. 9ஆவது நிமிடத்தில் சென். மேரிஸுக்கு தண்டனை உதைகிடைத்தது. யூட் அதனை கோலாக மாற்றினார்.

பதிலுக்கு கோல் அடிப்பதற்கு கலைமதி கடுமையாக முயற்சித்தது. எனினும் சென். மேரிஸ் பின்கள வீரர்கள் பலமான தடுப்பரணை அமைத்தனர். அதேசமயம் முன்னேறி கலைமதியின் கோல் பரப்பை அடிக்கடி ஆக்கிரமிக்கவும் அவர்கள் தவறவில்லை.

இடையில் கிடைத்த ஒருசில சுமாரான சந்தர்ப்பங்களை இரு தரப்பினருமே கோல்களாக்கத் தவறினர். கலைமதியின் கடும் முயற்சிகள் பலிக்காத நிலையில் இடைவேளை வந்தது. சென். மேரிஸ் ஒரு கோல் அடித்த நிலையில் முன்னிலை பெற்றிருந்தது.

ஆட்டம் மீண்டும் ஆரம்பித்த போது கலைமதி கோல் அடிக்கும் தனது உத்வேகத்தைத் தீவிரப்படுத்தியது. சென். மேரிஸ் தடுப்பாட்டத்தில் அதிக கவனமாக இருந்தது. கலைமதி மீண்டும் மீண்டும் முன்னேறி கோல் அடிப்பதற்கான எத்தனங்களிலேயே குறியாக இருந்தது. 48ஆவது நிமிடத்தில் அருமையான ஒரு வாய்ப்புக் கிடைக்க, பாய்ந்து முன்னேறிய கலை மதி வீரன் பானுப்பிரியன் அற்புதமாக ஒரு கோல் அடித்து ஆட்டத்தைச் சமன்செய்தார்.

சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியின் பின் தடுப்பரணை ஊடறுத்த அவர், கோல்காப்பாளரையும் தாண்டி கம்பங்களுக்கு இலாவகமாகப் பந்தைத் தள்ளினார். தடுப்பாட்டத்தில் கவனமாக இருந்த சென்.மேரிஸ் வீரர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். எனினும் சுதாகரித்துக் கொண்ட சென். மேரிஸ் அடுத்த சில நிமிடங்களில் மீண்டும் முன்னேறி கோல் அடிப்பத்தில் தீவிரமாகியது. 59 நிமிடத்தில் ஜக்சன் அபாரமாக ஆடி கோல் அடித்தார். கலைமதியின் பின்கள வீரர்கள் நால்வருக்கும் தண்ணி காட்டிவிட்டு பந்தை முழுக் கட்டுப்பாட்டில் வைத்து ஓங்கி உதைத்தார். தடுக்கப் பாய்ந்த கோல்காப்பாளரையும் ஏய்த்துவிட்டு கம்பங்களுக்குள் சரணாகதி அடைந்தது பந்து.

உற்சாக வெறியில் [illegible]ழ்ச்சி ஆரவாரம் செய்த சென் மேரிஸ் ரசிகர்கள் மைதானத்துக்குள் ஓடிச்சென்று ஜக்சனை உச்சிமுகர்ந்து பாராட்டினர்.

முடிவில் நாவாந்தறை சென். மேரிஸ் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியை உறுதி செய்தது. 2014ஆம் அண்டு மைலோ கிண்ணத்தை தன தாக்கியது.

காலையில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்கொண்ட பாடும்மீன் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மைலோ தொடர்நாயகனாக நாவாந்தறை சென். மேரிஸ் வீரன் அன்ரன் சாள்ஸும் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜெனட்டும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த கோல்காப்பளார் பரிசும் சென். மேரிஸ் அணிக்கே கிடைத்தது. வெற்றி பெற்ற அணிகளுக்கு கிண்ணங்கள் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(உ-23-86)

## இளம்பறவை எதிர் சந்திரன் இறுதியாட்டத்தில் மோதல்

முல்லைத்தீவில் உள்ள 591 ஆவது இராணுவப் படையணி நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக் கழகமும் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று இறுதியாட்டத் துக்குத் தகுதி பெற்றுள்ளன.

அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று அரையிறுதியாட்டங்கள் நடைபெற்றன. உதிக்கும் திசை விளையாட்டுக்கழகமும் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகமும் மோதிய ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் இளம்பறவை வெற்றிபெற்றது. 2:1 என்ற கோல் கணக்கில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழத்தைத் தோற்கடித்து செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

(உ-23)

## கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் முடிவுகள்



யாழ்ப்பாணம், நவ. 23

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் தனது 'ஏ' பிரிவு அணிகளிடையே நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பளை விளையாட்டுக்கழக அணிக்கும் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே மோதல் இடம் பெற்றது. பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

உதயதாரகை விளையாட்டுக்கழக அணிக்கும் பூநகரி விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பூநகரி விநாயகர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணிக்கும் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(உ-23)

## லூட்சியா, சென்.ஜோசப் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 24

மன்னார் உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழகம், பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிக் குத்தெரிவாகியுள்ளன.

முதல் காலிறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியும் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதின. இரு அணியினரும் தலா ஒரு கோல் அடித்தனர். வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. சென். லூட்சியா 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முன்னதாக, தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியுடனான ஆட்டத்திலும் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது.

பனங்கட்டுக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக் கழக அணிக்கும் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் பனங்கட்டுகொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டதிற்குத் தகுதி பெற்றது.

சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணிக்கும் சாந்திபுரம் புறோ ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தாழ்வுபாடு ஆயர் ஜேசப் அண்டகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற முதல் அரையிறுதியாட்டத்தில் பள்ளி முனை சென். லூட்ஸ் விளையாட்டக் கழகமும் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழகமும் மோதின. பள்ளிமுனை சென். லூட்சியா 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பனங்கட்டிக் கொட்டு சென். ஜோசப் விளை யாட்டுக் கழக அணியும் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி யும் மோதின. ஆட்டம் முழுவதும் இரு அணிகளுமே கோல் எதனையும் அடிக்கவில்லை. சமநிலை தகர்ப்பு உதைகளும் தொடர்ந்து சம நிலையிலேயே முடிந்தன. வழங்கப்பட்ட 11 சந்தர்ப்பங்களிலும் இரு அணியினரும் விட்டுக் கொடுக்காமல் முழுமையாக கோல் அடித்தனர். கடைசியில் நாணயச் சுழற்சி மூலமே வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. அதிர் ஷ்டம் பனங்கட்டிக்கொட்டு சென்.ஜேசப் அணிபக்கமே வீசியது. (உ-23)



# முதலிடத்தை பிடிப்பதே இலக்கு

ரென்னிஸ் இரட்டையர் உலகத்தர வரிசையில் முதலிடத்தை பிடிப்பதே இலக்கு என்று தெரிவித்துள்ளார் இந்திய ரென்னிஸின் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா.
இளைஞர்கள் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டபோதே சானியா இவ்வாறு கூறினார்.
ரென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதற்குள் ரென்னிஸ் இரட்டையர் உலகத்தர வரிசையில் முதல் இடத்தை பெறுவதே தனது லட்சியம் என்று கூறியுள்ள அவர், இளைஞர்களிடையே குறிப்பாக, பெண்களிடையே விளையாட்டைப் பற்றிய உத்வேகத்தை ஏற்படுத்த இந்தியா இன்னும் மிக நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"முந்தைய நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. விளையாட்டுத் துறையை தங்களுக்கு பிடித்தமான துறையாக பெண்கள் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு இன்னும் எதிர்காலத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும் என நான் நம்புகிறேன்.
தங்கள் மகள்களும் தொழில் ரீதியான விளையாட்டு வீராங்கனைகளாக வருவார்கள் என்று அவர்களது பெற்றோர்கள் நம்புவதற்கு, நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. பணத்துக்காகவோ, புகழுக்காகவோ நான் ரென்னிஸை தேர்ந்தெடுக்கவில்லை. அது எனது நோக்கமாக இருந்தது.
இந்த துறைக்கு நான் வந்த ஆரம்ப காலத்தில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டு, அவற்றை எல்லாம் கடந்து, வெற்றிகரமாக முன்னேறி வந்தேன்"- என்று அவர் கூறினார். (ற)

# ஸ்டெய்னின் வேகத்தில் உடைந்தது மக்ஸ்வெல் துடுப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் டேல் ஸ்டெய்னின் வேகத்தில் அதிரடி வீரர் மக்ஸ்வெல்லின் துடுப்பு மட்டை உடைந்தது.
ஆஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. அதன் நான்காவது ஆட்டம் மெல்போர்னில் நடந்தது. முதலில் விளையாடிய தென்னாபிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்கள் எடுத்தது.
268 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆஸ்திரேலியா களமிறங்கியது. 22ஆவது பந்துப்பரிமாற்றத்தில் டேல் ஸ்டெய்ன் வீசிய பந்தை மக்ஸ்வெல்




அடிக்க முயன்ற போது அவரது துடுப்பாட்ட மட்டை உடைந்தது.
இறுதியில் ஆஸ்திரேலியா 49 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 7 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்கள் எடுத்து, 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதன் மூலம் ஆஸ்திரேலிய அணி 3:1 என முன்னிலைப்படுத்தி இருந்தது. (ற)

# இந்தியாவுக்கு காத்திருக்கிறது சவால்

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பணயம் மேற்கொள்ளும் இந்திய கிரிக்கெட் அணி நான்கு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இந்த டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் ஆஸ்திரேலிய அணியின் விவரம் இன்று அறிவிக்கப் படவுள்ளது. அதில் ஜோன்சன், சிடில், ஹசில்வுட் மற்றும் ரியான் ஹாரிஸ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.
ஜோன்சன் ஏற்கனவே வேகப்பந்துக்கு சாதகமான ஆடுகளத்தில் அபாரமாக பந்து வீசக்கூடியவர். கடந்த சில மாதங்களுக்கு முன் தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். அத்துடன் கடந்த இந்திய தொடரில் இவர் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. அப்போது தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களான சச்சின், டிராவிட், லட்சுமண் போன்றோர் இருந்தார்கள்.
தற்போது அனைவரும் இளம்வீரர்கள். ஆகவே, இவரது பந்தை இந்திய வீரர்கள் எப்படி சமாளிப்பார்கள் என சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.
தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஹசில்வுட் அபாரமாக பந்து வீசி வருகிறார். ஆகவே, இவரும் ஆஸ்தி ரேலியா அணியில் இடம்பிடிக்க உள்ளார். ஆஸ்திரேலியா அணியில் இடம்பெற்றால் இவருக்கு இதுதான் முதல் போட்டியாகும். இவரும் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிகளவில் நெருக்கடி கொடுப்பார்.
சிடில், பந்தை ஸ்விங் செய்வதில் வல்லவர். அதிலும், பழைய பந்தில் பந்தை அருமையாக ரிவர்ஸ் ஸ்விங் செய்வார். ஆஸ்திரேலியா ஆடுகளத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள், இவர் பந்தை சமாளிப்பது மிகக்கடினம்.
கடந்த ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆசஷ் தொடரில் விளையாடிய ஹாரிஸ் காயம் காரணமாக டெஸ்ட் அணியில் இதுவரை இடம்பெறாமல் உள்ளார். அவர் 4-வது வேகப்பந்து வீச்சாளராக இடம்பெறுவார் எனத்தெரிகிறது. (ற)

# வங்கப் புலிகளின் ஆதிக்கம் தொடர்கிறது



பங்களாதேஷ் மற்றும் சிம்பாவே அணிகளுக்கிடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று பங்களாதேஷ் சிட்டகொங் மைதானத்தில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரமீம் மற்றும் கக்கியு தமக்குள் இணைப்பாட்டமாக 158 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். ஆனால் தொடர்ந்து வந்த மத்திய வரிசை வீரர்களான சகிப் அல் ஹசைன் 0 (1), முகமதுல்லா 12(24), றஹ்மான் 0(2), மோர்ரசா 6(9) என சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேற பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 251 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக கக்கியு 80 (110), ரமீம் 76(98), றகீம் 27(29) ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்துவீச்சில் சிம்பாவே சார்பாக பன்ஜங்கரா, கமுன்கோசி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சரறா, சிபென்டா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
252 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் உட்பட முன்னிலை வீரர்கள் எவருமே நிலைக்கத் தவறினர். மசகட்சா 0(5), றசா 16(24), சிபெண்டா 21(15), றெய்லர் 8(19) என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற சிம்பாவே அணி 14 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 50 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. மத்தியவரிசை வீரர்களான மிறி 50 (79), சக்கபவ 32 (53), சிக்கும்புறா 38 (31) ஓட்டங்களைப் பெற்ற சற்று ஆறுதல் கொடுத்தாலும் தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் நிலைக்கத் தவற சிம்பாவே அணி 44.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 68 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சணி 4 இலக்குகளையும், மோர்ரசா 3 இலக்குகளையும் கொசைன், சகிப் அல் ஹசைன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்டநாயகனாக மோர்ரசா தெரிவானார்.
5 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் பங்ளாதேஷ் அணி 2:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நாளைமறுதினம் டாக்காவில் நடைபெறவுள்ளது. (ற-ரி)

# திரில் வெற்றியுடன் ஆஸ்திரேலியா தொடரை தன்வசமாக்கியது



ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி திரில் வெற்றி பெற்றுத் தொடரைத் தன்வசமாக்கியது. நேற்றைய ஆட்டம் ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் நடைபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி ஆரம்பவீரர்களாக களமிறங்கியவர்களில் அம்லா 18 (28) ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் மூன்றாம் இலக்க வீரராக களமிறங்கிய றொஸ்சொவ் மற்றும் கொக் தமக்கிடையே இணைப்பாட்டமாக 107 ஓட்டங்களைப் பகிர அணி வலுவான நிலைக்குச் சென்றது. மத்திய வரிசை வீரர்களான பிளாசிஸ் 2(3), மில்லர் 5(12) என சொற்ப ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினர். ஆனால் தொடர்ந்து வந்த பெக்கார்டினின் அதிரடி கைகொடுக்க 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 6 இலக்குகள் இழப்பிற்கு 280 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கொக் 107(123), பெக்கார்டின் 63(41), றொஸ்சொவ் 51(71) ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கும்மின்ஸ் 3 இலக்குகளையும், பல்க்நெர், மக்ஸ்வெல், சிமித் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 281 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியின் ஆட்டநேரத்தில் மழை குறுக்கிட போட்டி 48 பந்துப்பரிமாற்றங்களாக மட்டுப்படுத்தப்பட்டு 275 ஓட்டங்கள் இலக்காக கொடுக்கப்பட்டது. அணியின் ஆரம்பவீரர்கள் உட்பட முன்னிலை வீரர்கள் அணியை சிறப்பாக வழிநடத்திச் செல்ல ஒரு கட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 37 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்பிற்கு 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த மத்திய வரிசை வீரர்களான மக்ஸ்வெல் 7(10), பெய்லி 4(7), வேட் 3(6), கும்மின்ஸ் 0(4) என அடுத்தடுத்து வெளியேற 45.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 8 இலக்குகள் இழப்பிற்கு 267 ஓட்டங்களை பெற்று தடுமாறிக் கொண்டிருந்தது. இறுதியில் ஒருவாறாக 5 பந்துகள் மட்டுமே மீதமிருக்க 8 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலியா வெற்றியீட்டியது. பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக பீற்றர்சன் 4 விக்கட்களையும் மோர்கல் 2 இலக்குகளையும் அப்பொற், பார்நெல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 5 போட்டிகளை கொண்ட தொடரை 4:1 என ஆஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது. ஆட்ட நாயகனாக கொக் தெரிவான அதேவேளை தொடராட்ட நாயகனாக சிமித் தெரிவானார். (ற-ரி)

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் தங்கம்மா

இணுவில் தாவடியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் தங்கம்மா நேற்று (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும், நாகமுத்து விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், கணபதிப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,தில்லையம்பலம் (விஸ்வாமில்), சச்சிதானந் தராஜா (கண்ணா கிளினிக்), தர்மகுலசிங்கம், புஸ்பராணி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், தணிகாசலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தெய்வசோதி, மௌலீஸ்வரி, யோகராணி, காலஞ்சென்ற காசிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், விஸ்வேதிதன், (பொறுப்பு வைத்திய அதிகாரி - இரத்த வங்கி- யாழ் போதனா வைத்தியசாலை), ததிஷீரன் (விவசாய உத்தியோகத்தர் - கார்கீல்ஸ் வடபிராந்தியம்), கல்யாணி (மக்கள் வங்கி).சத்திய சீலி (UK), மீனா (ஹற்றன் நஷனல் வங்கி), தாட்சாயினி (கனடா), ராகுலன் (நிர்வாகி -Epitom Consulting) விஸ்ணுப்பிரியா (ரூபவாகினி கூட்டுத்தாபனம்), இந்துஷன் (சிங்கப்பூர்), கேசிகன் (சுவிஸ்லாந்து), பிரசன்னா (எசட்லைன்), காயத்திரி (UK),கௌசிகா (ஹற்றன் நஷனல் வங்கி), பருதீசன், ஶ்ரீராமராஜன் (USA), தர்சகுமார், திவ்வியா (கல்வியியற் கல்லூரி- கோப்பாய்) அன்புப் பேர்த்தியும், வினோஜா (பிரதேச செயலகம்- ஊர்காவற்றுறை), புலேந்திரன் (கைத்தொழில் அமைச்சு - கி.மா.சபை), சுமந்திரன் (UK),சதீசன் (DFCC Bank), கலைகவி,இரட்ணகுமார் (Janashakthi Insurance) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அத்விகா,திவ்வியேஷ், அபிலாஷ், ஐஸ்னுகா, இஷானிக்கா, வேணுசிகன், அஸ்விந், சஷ்வின், விதுஷிகன், சமித்தா,சஷ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
0773580939

தொடர்ச்சிகள்

### நகரில்

இடையில் ஏற்பட்ட பிணக்கு பின்னர் சண்டையாக வெடித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கற்கள், போத்தல்கள் கொண்டு இரு தரப்பினரும் சண்டையிட்டதால் வீதி முழுவதும் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு போத்தல் சிதறல்கள் கிடப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விவரம் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

(உ-23)

### நெருக்கடிக்குள்

ரைக்குச் சென்ற அவர் வழி பாடு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். கண்டி தலதா மாளிகை மற்றும் சிறி மகா போதி ஆகிய விகாரைகளுக்குச் சென்று இன்று மாகாநாயக்கர்களின் ஆசியைப் பெற்றுக்கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.



# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சண்முகம் சிவகுமாரன் (JP)

(தவிசாளர், வலி. தென்மேற்குப் பிரதேச சபை)

எமது சபையின் தவிசாளராக கடமையாற்றி மக்களுக்கு தனது இறுதி நாள் வரை சேவை புரிந்து 23.11.2014 ஆம் திகதியன்று இறைபதம் அடைந்த எமது தவிசாளருக்கு ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் பிரதேச வாழ் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உப தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

CAPS

(Canadian Academy of Professional Studies)

52,Palaly Road,Thirunelvely Jaffna. (Near Sampath Bank)



IELTS தேர்வு

★ 03 மாதங்கள் - 80 மணித்தியாலங்கள்
★ பொருத்தமான கற்பித்தலும், பயிற்சியும்
★ சிற்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது

NURSING ENGLISH MEDIUM (Canadian Curriculum)

★ பயிற்சிக் காலங்களில் பயிற்சியாளர்களுக்கு தனியார் வைத்திய சாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும்.
★ தகுதியானவர்களுக்கு அவ் வைத்தியசாலைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

முழு நேரம்
திங்., வெள்ளி
8.30 - 2.00

பகுதி நேரம்
சனி., ஞாயிறு
8.30 - 4.30

TEACHER TRAINING IN ENGLISH

★ ஆங்கிலம் கற்பிப்பதற்கான பயிற்சி நெறி பயிற்சி வார நாள்கள் அடங்கலாக 10 மாதம் வழங்கப்படும்.
★ தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
★ சிறந்த தகுதிவாய்ந்த வளவாளர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

முழு நேரம்
திங்., வெள்ளி
8.30 - 2.00

பகுதி நேரம்
சனி., ஞாயிறு
8.30 - 4.30

விண்ணப்ப கடைசித் திகதி : 30.11.2014

வகுப்புக்கள் ஆரம்பம் : 01.12.2014

தொடர்புகளுக்கு:

Srilanka : 077 386 7458 | Canada : 416 986 9554

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.சு.லோகேஸ்வரன்
(BA,Hons,PGDE (Goldmedal))

திரு.ப.விஜயதாஸ்
(HNDA, PGDE)

யாழ். பல்கலைக்கழகத்தில் 11.11.2014 அன்று நடைபெற்ற 30ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்கள் திரு. சுந்தரலிங்கம் லோகேஸ்வரன், திரு.பசுபதி விஜயதாஸ் ஆகியோரை மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று


பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கிளி/திருவையாறு மகாவித்தியாலயம், கிளிநொச்சி.

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை (மாணிக்கம்) யோகராஜா

### (முன்னாள் சரிதா நகைமாடம் உரிமையாளர் யாழ்ப்பாணம்)



வேலணைகிழக்கை பிறப்பிடமாகவும் கொட்டடி சீனி வாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன் னுத்துரை (மாணிக்கம்) யோகராஜா அவர்கள் 23.11.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற அம்பலவாணர் பொன்னுத் துரை. கன கம்மா-தம்பதியரின் பாசமிகு மகனும் சபாரத்தினம் (காந்தி) காலஞ்சென்ற அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் அன்பு கணவரும் சயனுதா (சுகாதார அமைச்சு கொழும்பு - முகா மைத்துவ உதவியாளர்) இந்துஜா (ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடி), சரணியா (ஜெயவர்த் தனபுர பல்கலைக்கழகம், ஜானுாஸ் (மொறட்டுவ பல்கலைக்கழகம்). சாருஜன், நிரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவஞானவதி மற்றும் சிவராஜா, சிவசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் வவுனியா) இந்திராணி (வவுனியா) சண்முகரத் தினம் (சுவிஸ்),பாஸ்கரன் (சுவிஸ்) யோகராணி (வவுனியா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (பிரான்ஸ்) ஜெகநாதன் (கனடா), சோதிமலர் (யாழ்ப்பாணம்), சபாநாதன் (பிரான்ஸ்), இராசேந்திரன் (பிரான்ஸ்), இராசமலர் (பிரான்ஸ்), இராசகுமார், பிரான்ஸ்) கோமளா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 32, சீனிவாசகம் வீதி,
கொட்டடி யாழ்ப்பாணம்.

தகவல்.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## தங்கத்துரை கணேசலிங்கம்



யாழ். பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி (Wuppertai) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கத் துரை கணேசலிங்கம் அவர்கள் (17.11.2014) திங்கட்கிழமை ஜேர்மனி யில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான சம்பந்தர் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கெங்காதேவி அவர்களின் அன்புக் கணவரும், வசிகரன் (லண்டன்), திவாகரன் (இலங்கை), ஆதிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் லோகநாதன் (இலங்கை), ஜெகதாம்பிகை (ஜேர் மனி), மோகனச் சந்திரன் (இலங்கை), ஜெகசோதி (இலங்கை), திரௌபதாதேவி (இலங்கை), ஶ்ரீரூபன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிரிஜா (இலங்கை), வாணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தில்லைநாதன், புஸ்பநாதன், மணிமேகலை, காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, நடராசா மற்றும் தெய்வானை, லெட்சுமணன், சந்திரசோதி, தங்கராசா, பத்மநாதன், தயாளினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனிஷ் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வும், இறுதிக் கிரியையும் இன்று (24.11.2014) திங்கட்கிழமை ஜேர்மனி நேரப்படி ந.ப 12 மணி தொடக்கம் பி.ப 13.30 மணிவரை Evangelischer friedhofsverband, wuppertal, heckinghauser strabe 88, 42289 wupertal Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

106/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன் க.திவாகரன்
மருமகள் தி.கிரிஜா.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்




பு.வினோஷன்
(153புள்ளிகள்)




த.கேதியா
(153 புள்ளிகள்)

இவ்விரு மாணவர்களும் 2014 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

| | |
|---|---|
| க.பவீனா | - 122 |
| கோ.ஆஷா | - 119 |
| சி. சிவருபன் | - 116 |
| ச.மிதுஷன் | - 105 |

இம் மாணவர்கள் அனைவரையும், தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை கற்பித்த ஆசிரியர்களையும், சிறப்பாக தரம் - 5 இல் கற்பித்த ஆசிரியை திருமதி கி.நந்தகோபன் அவர்களைளையும் வழிகாட்டிய அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்துகின்றோம்.

பாடசாலை சமூகத்தினர்.

(சி/17799)

# வடிகிறது வெள்ளம்

மட்டக்களப்பு, நவ. 24

மட்டக்களப்பு நகரில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் படிப்படியாக வடிந்துவருவதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையுடன் மழை ஓய்ந்துள்ளது. மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடை மழையால் வாவிகளின் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளநீர் வீதிகள் மற்றும் வீடுகளில் புகுந்துள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு முகத்துவாரத்தை வெட்டிவிடுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன் உள்ளிட்டோர் முகத்துவாரம் பகுதிக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். இதன் பின்னர் முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ளநீர் கடலுக்கு ஓட ஆரம்பித்தது. இந்த நிலையில் வெள்ளநீர் படிப்படியாக குறைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து பெய்த மழையால் படுவான்கரையில் பல கிரா்மங்களும், வயல்களும், வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கரையோரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வெள்ளநீர் ஊடறுத்துள்ளது. அந்த வகையில் பண்டாரியாவெளி கிராமத்தினுள் வெள்ளநீர் உட்புகுந்ததால் அந்தக் கிராமம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மண்டூர் -வெல்லாவெளி வீதி, பெரியபோரதீவு -பழுகாமம் வீதி, அப்பிளாந்துறை-தாந்தாமலை வீதி, மண்முனை-மகிழடித்தீவு வீதி போன்றவற்றில் வெள்ள நீர் ஊடறுத்துச் செல்வதால், இந்த வீதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-10)

# கண்ணீர் அஞ்சலி


எமது சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பயிற்சித் திட்டப் பணிப்பாளரான க.சத்தியேந்திரன் அவர்களின் தந்தையாரான

**கந்தையா சுந்தரலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம். (C/17796)(4.3.6)

சைவ வித்தியா விருத்திச் சங்கம், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்.

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **வைரமுத்து செல்லையா**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 22 |
| 06 | 11 |
| 1925 | 2006 |

திதி: திருதியை (24.11.2014)

ஓடி விட்டது 8 வருடங்கள் ஆனால்
கல்லில் எழுத்துப் போல் உங்கள் நினைவுகள்
எத்தனை வருடங்கள் உருண்டோடினாலும்
உங்கள் இறப்பு என்றும் மறக்க முடியாத
பேரிழப்பாகும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்.
மகன் செ.தவனேஸ்வரன்.
(சி/17677)(2.6.4)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வே.சிவசாமி (தம்பிராசா)**

தோற்றம் 29.10.1944
திதி: துதியை (24.11.2014)
மறைவு 04.12.2013

ஆண்டொன்று ஆனது ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் உம் பூ முகம் காண்பதிங்கே எப்போது?
காத்திருக்கின்றோம் நாம் பூத்து புது வரவோடு

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி/17690)(4.6.3)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்,
உறவினர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி


தென்மராட்சி பிரதேச செயலகத்தில் திவிநெகும உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சிவாஜினி அருள்நாதன் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி பரமு செல்லம்மா**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.
(சி/17798)(4.3.6)

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 02 |
| 11 | 12 |
| 1931 | 2005 |

அமரர் **ஐயாத்துரை பூபாலசிங்கம்**


திதி: வளர்பிறை துதியை

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் என்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் என்ன
எம் அன்புத் தெய்வம் அப்பாவின்
அன்பும் பாசமும் எம்மைவிட்டு நீங்காது
என்றும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

இல.11, கல்ட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (C17779)(12.3.6)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**கருணாகர் சுப்பையா கருணானந்தம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர்
உள்ளூராட்சி மன்றம்)

மஞ்சத்தடி இணுவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கருணானந்தம் (22.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், அன்பரசி (லண்டன்), வாசுகி (லண்டன்), கலைவாணி, முகுந்தீபா (லண்டன்), கோகுலகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியவரதன் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), சுதாகரன் (சுவிஸ்), கம்ஷரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சச்சிதானந்தம், அழகானந்தம், சிவமணி, மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாதம், தவயோகம், இராசேஸ்வரி, அமிர்தகௌரி வடிவேலு, கௌரி ஆகியோரின் மைத்துனரும், மங்களேஸ்வரனின் சகலனும், கஸ்தூரி, அபிராம், பிரியங்கா, ஆர்தீஸ், அஷ்வத் நிதிலேஷ், அருனேஷ், சுருதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை இணுவில் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
011 317 2478

ரயில் நிலையத்தடி,
இணுவில். (41472)(45.6.3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி பத்மாவதி குழந்தைவேலு அவர்களின் அன்புத் தந்தை

**வீரசிங்கம் குழந்தைவேலு**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.
(சி/17798)(4.3.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **புஸ்பவதி பத்திநாதன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 24 |
| 12 | 11 |
| 1960 | 2013 |

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

ஆண்டு ஒன்று ஓழ மறைந்ததம்மா
இன்னும் ஆறாத வடுக்கள் எம்மனதில் உம் பிரிவால்
என்றும் உம் நினைவுகளைச் சுமந்தவர்களாய்
எம் வாழ்க்கைப் பயணம் தொடர்கின்றது
உம் ஆசீர்வாதங்கள் எம்மை வழி நடத்தட்டும்.


(47934)
(4.6.3)

இல-1060
திருநகர், கிளிநொச்சி

நீங்காத நினைவுடன்
கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பாவிலு சுவக்கீன்பிள்ளை (சலமோன்)



4 ஆம் கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு சுவக்கீன்பிள்ளை (சலமோன்) கடந்த (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாவிலு - ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சூசானம்மாவின் (புஸ்பம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆசீர்வாதம், பேதுரு, சூசைப்பிள்ளை மற்றும் செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பூமணி, றோஸ்மணி மற்றும் வசந்தன் (இத்தாலி), இராக்கினி, ஜெறோம், பாலதாஸ், வவா, ஜீவா (அமெரிக்கா), வதனா, ரவி (பிரான்ஸ்), பாஸ்கரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், விஜயன், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்துரை, மற்றும் ஞானம், ராணி, இன்பராணி, குமார், ஜெனிற்றா, தேவராசா, புனிதா, றெலி ஆகியோரின் மாமனும், கௌசலா (பிரான்ஸ்), சுமிதா (டென்மார்க்), ஜெலிதா (அமெரிக்கா), விஜிதா, சுபா (பிரான்ஸ்), றொசான் (லண்டன்), றிச்சேட் (இத்தாலி), றொசானி (லண்டன்), கஜானி (அமெரிக்கா), பிரதீபன் (அமெரிக்கா), சஞ்சீபன் (லண்டன்), சலீபன் (லண்டன்), சோபா, நிசாந்தினி, நிசாந்தன், செல்வி காலஞ் சென்ற சூட்டி மற்றும் பிரியா, பாரத் (லண்டன்), ரூபினி (கனடா), அமல தாஸ், சியானா, சாளினி, தங்கா (நியூசிலண்ட்), அனோஜன், ஆன்னா (அமெரிக்கா), சிந்தியா (அமெரிக்கா), ஜெமினா, றோஜிதா, ஸ்ரெபி (பிரான்ஸ்), றவமியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.11.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
தொடர்பு:0770398884
0722342411

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0212567111

## கண்ணீர் அஞ்சலி



எமது கமநலசேவை
நிலையங்களின் பெரும்பாக
உத்தியோகத்தர் S. சத்தியேந்திரா
அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு கந்தையா சுந்தரலிங்கம்

கடந்த 22.11.2014 அன்று இறைபதமடைந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
கமநலசேவைச் சமூகம் சாவகச்சேரி மற்றும் கமநலசேவைச் சமூகம்
நல்லூர் (52022)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் பாலசுந்தரம்

**(பாலு மனேஜர்)**

(முன்னை நாள் முகாமையாளர் - கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச)

பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, கண்டாவளையை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பாலசுந்தரம் 22.11.2014 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் வல்லிபுரம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், தவமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் - கண்டாவளை) நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் சௌந்தலை (பெரியமாவடி), காலஞ்சென்ற தியாகராசா மற்றும் நவரத்தினம் (இந்தியா), தேவராசா (கல்வயல்), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாசுகி (லண்டன்), சுகிர்தா (சுவிஸ்), சுதன் (வவுனியா), விஜிதா (நியூஸிலாந்து), விஜிதன் (லண்டன்), வினோதா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (லண்டன்), சுதாகரன் (சுவிஸ்), சுபோதினி (வவுனியா), ஜோதீஸ்வரன் (நியூஸிலாந்து), வினோபா (லண்டன்), நித்தியானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமியா, சுஸ்மிகன், அஜ்ந், அஸ்விகா, ஆசிகன், அக்ஷயன், சுஸ்மிதா, அம்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளியம்மை (முரசுமோட்டை), வசந்தமலர் (முன்னாள் உபதபால் அதிபர் - கண்டாவளை- அமெரிக்கா), திருக்கேதீஸ்வரன் (தபால் திணைக்களம் - பரந்தன்), விஸ்வநாதன் (ஜேர்மனி), மதிவதனி(கண்டாவளை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை அவரின் கண்டாவளை, பிரதான வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கண்டாவளை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டாவளை. (47940) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சண்முகதாசன் சிவகுமாரன்

(வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளரும், ஓய்வுபெற்ற கிராம அலுவலரும்)

மானிப்பாய் தெற்கு கட்டுடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகதாசன் சிவகுமாரன் நேற்று (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் வலி. தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளரும், ஓய்வுபெற்ற கிராம அலுவலரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகதாசன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும், விசாகதேவியின் கணவரம், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பூர்ணம் தம்பதியரின் மருமகனும், சிவாஜினி (வலி. தென்மேற்குப் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சிவேந்திரா (ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருக்குமரன் (Swiss development cooperation, யாழ்ப்பாணம்), சுகனியா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜானனின் ஆருயிர் பேரனும், ரதிதேவி, பத்மினி, ராஜீவி, உஷா (பிரான்ஸ்), லோகினி, யோகினி (நோர்வே), சிவயோகம் (நோர்வே), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரம், சிவசுப்பிரமணியம், மற்றும் தெய்வேந்திரன், ஸ்ரீகாந்தன் (இந்தியா), காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் சிவநேசன், பேரின்ராஜா, காலஞ்சென்ற தேவராஜா மற்றும் குலேந்திரன், தயாபரநாதன், சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜனகன் (லண்டன்), விபுலன், கணேஷாயினி (அமெரிக்கா), கணேந்திரா, பிரணவாஜினி, பிரணவன் (பிரான்ஸ்), பிருந்தாபன், கணேஷானந், கணேஷா (நோர்வே), பிரதாஜினி (நோர்வே), சுந்தர்ஜினி (லண்டன்), சுந்தர்ஜன் (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2014) திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தாய்மடி'
கட்டுடை, மானிப்பாய். தொ.இல- 0212256156

தகவல்:
சி.சிவேந்திரா (மகன்).

## தொடர்ச்சிகள்

### நவீன

கத்தின் பேராசிரியர் கந்தசாமி.
கிளிநொச்சி - யாழ்ப்பாணத்துக்கான இரணைமடு குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துரை வழங்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"பெரிய பெரிய நாகரிகங்கள் தோன்றிய காலங்களில் நீர் வளம் உள்ள பிரதேசங்களை அண்டி மக்கள் வாழ்ந்தமை வரலாற்றுத் தகவல். சனத் தொகைப்பரம்பல் நீர் வளம் உள்ள இடத்தில் செறிந்தும் காணப்பட்டன. மனிதனுக்கு தண்ணீரின் அவசியத்தை இவை சுட்டிக்காட்டுகிறது.
இலங்கையில் பல இடங்களில் தண்ணீர் மாசடைந்துள்ளன. அநுராதபுரம் வவுனியா மாவட்டங்களில் பாரமான உலோகங்கள் நீரில் கலந்திருப்பதால் நீர் மாசடைந்து வருகிறது. யாழ். மாவட்டத்தில் விவசா யத்துக்கு பயன்படுத்தப்படும் பசளைகள் மற்றும் கல்சியம் செறிவால் தண்ணீர் மாசடைந்துள்ளது. அதனால் நல்ல குடிதண்ணீர் கிடைக்காமல் நோய் ஏற்படுகிறது.
இதற்காக அரசால் 2015 ஆம் ஆண்டில் 85 வீதமான சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதற்கும், 2025 ஆம் ஆண்டு 100 வீதமான சுத்தமான குடி தண்ணீரை வழங்குவதற்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் ஆசிய வங்கியில் கடனாக பெற்ற 18 பில்லியன் ரூபாய் நிதியில் 3 நீர்ப் பாசனத் திட்டங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டது. அதனடிப்படையில் வல்வெட்டித்துறை - பருத்தித்துறை நீர்ப் பாசனத் திட்டம், கிளிநொச்சி - யாழ்ப்பாணம் நீர்ப் பாசனத் திட்டம், பரந்தன் - கிளிநொச்சி நீர்ப்பாசனத்திட்டம் என்பன முன்மொழியப்பட்டன. அவை தற்போது விமர்சிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. இத்தகைய திட்டத்தால் 20 வீதமான நீர் சிறுபோகத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது. வளமான நோயற்ற வாழ்வுக்கு நீரின் அவசியத்தை உணர்ந்து பொருத்தமுடைய நீர்த்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம்"- என்று தெரிவித்தார். (ற-14)

### மீரியபெத்த

உயிர்கள் உட்பட உடைமைகளையும் இழந்த, கொஸ்லந்த மீரியபெத்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள மாகந்த தொழிற்சாலையில் வைத்து நிவாரணப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. 78 குடும் பங்களுக்கான நிவாரணப் பொருள்களே நேரடியாக அந்தக் குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டன.
இதனைத் தொடர்ந்து திய கல, மீரியபெத்த போன்ற பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடப்பட்டிருந்த பகுதியில் இருந்து வெளியேற்றப் பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் பூனாகல தமிழ் மகா வித்தியாலயத்தில் உள்ள 72 குடும்பங்களுக்கான நிவாரண பொருள்களும் நேரடியாக மக்களிடம் கையளிக்கப்பட்டன.
மண்சரிவு அபாய எச்சரிக்கை விடப்பட்ட பூனாகல தொழிற்சாலைப் பிரிவைச் சேர்ந்த 39 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் எதிரொலி விளையாட்டு கழகத்திற்கான பொருள்களும் வழங்கப்பட்டன. அதேவேளை நேற்றுமுன்தினம் மண்சரிவு எச்சரிக்கை விடப் பட்டு உடனடியாக வெளியேற்றப்பட்டு பிள்ளையார் ஆலயத் தில் தங்க வைக்கப்பட்டிருந்த கீழ்ப்புற லுணுகல தோட்டப் பிரிவைச் சேர்ந்த 58 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபா வீதம் வழங் கப்பட்டுள்ளது.
இதன் போது, வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் ரி.எஸ். இராசலிங்கம் தலைமை யில், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் தியாகராசா, வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம் (மோகன்), வர்த்தக சங்கத் தின் இயக்குநர் குழு உறுப்பினர் வாடி வீடு அதிபர் கதிர்காம ராஜா, புளொட்டின் நோர்வே கிளையின் அமைப்பாளர் சிவராசா இராசசிங்கம், கோவில் குளம் இளைஞர் கழகத் தலைவர் திரு சு.காண்டீபன், கழக உறுப்பினர்ந.தினேஷ் ஆகியோர் இணைந்திருந்தனர். (ற-5)

### இறப்பு

வைத்தியத்துறையில் தேர்ச்சியில்லாதவர்களால் இறப்புக்கான காரணம் குறிப்பிடப் படும் போது அது புள்ளிவிவ ரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இங்கு எவ்வாறான நோய்கள் அதிகரித்துச் செல்கின்றன, எதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன, சில வேளைகளில் ஆபத்தான நோய்களினால் இறந்திருந் தாலும் அது தவறவிடப்படக் கூடும். இது ஆபத்தான விடயம்.
புள்ளிவிவரங்கள் சரியாக இருந்தால் மாத்திரமே, தீர்வு கள் காண முடியும். இறப்புகள் எதனால் அதிகரிக்கின்றது என்பதை ஆய்வு செய்வதற்கு புள்ளி விவரங்கள் தேவை. ஆனால் இறப்புக்கு தவறான காரணங் களைக் குறிப்பிட்டு பதிவு செய்யும் போது அது புள்ளிவிவரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.
கடந்த போர்ச் சூழலின் போது கிராமசேவையாளர்களே இறப்புக்கான காரணங்களைப் பதிவு செய்தனர். அதையே தற்போதும் முன்னெடுக்கப் பார்க்கின்றனர். அதனால் ஏற்படும் பாதிப்பை உணர்ந்து கிராம சேவையாளர்கள் இதனை ஊக்குவிக்கக் கூடாது.
இதேவேளை, யாழ்.மாவட்ட அரச அதிபர் ஊடாக, கிராம சேவையாளர்களுக்கு இது தொடர்பான விழிப் புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது"- என்று தெரிவித்தார். (ற-5)

### அந்தர்பல்டிக்கு .

துக்கு எதிராகத் தமது வாக் கைப் பயன்படுத்தாது வாக்கெ டுப்பிலிருந்து விலகியிருக்க முடிவெடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் நிலைப் பாட்டில் இருக்கின்றது. அமைச் சர் வாசுதேவநாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, அமைச்சர் திஸ்ஸ விதாரண தலை மையிலான லங்கா சமசமாஜக் கட்சி, அமைச்சர் டியூ தலைமையிலான இலங்கை கம் யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், தேசிய சுதந்திர முன்னணி ஆகியன வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்க ளிக்கவுள்ளன.
அதேவேள்ளை, வரவு - செல வுத் திட்டம் மீதான வாக்கெடுப் பின் போது இரு தரப்புகளிலி ருந்தும் கட்சித் தாவல்கள் இடம்பெறவுள்ளன என்றும், அரச தரப்பிலிருந்து மூக்கிய சில அமைச்சர்கள் எதிரணிப் பக்கம் பல்டியடிப்பார்கள் என்றும் அறியமுடிகின்றது.
நாடாளுமன்றில் இன்று நிதியமைச்சு மீதான குழுநிலை விவா தம் முடிவடைந்த பின் னர் மூன்றாம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.
நிதியமைச்சு மீதான விவாதத்தில் பதிலுரையாற்றுவதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சபைக்கு வருவார் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. அவர் வராவிட்டால் அமைச்சர் சரத் அமுனுகம பதிலளித்து உரையாற்றுவார்.
வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போது அதற்கு ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 57 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ற-5)

### வடக்கு

"1981 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தனியாக யாழ்.மாவட் டம் என்று இருந்த போது 8 லட்சத்து 30 ஆயிரத்து 552 பேர் சனத் தொகையாக இருந்தது. கிளிநொச்சி மாவட்டம், யாழ்.மாவட்டம் என வேறாக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் 5 லட்சத்து 83 ஆயிரத்து 378 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 1 லட்சத்து 12 ஆயிரத்து 875 பேர் சனத் தொகையாகவும் உள்ளது.
கடந்த காலச் சனத்தொகைக்கு ஏற்ப அரசியல் பலம் அதிகமாக இருந்தது. ஆசனங்களும் வடக்கு, கிழக்குக்கு அதிகம் இருந்தன. தற்போது ஆசனங்கள் குறைக்கப்பட்டு விட்டன. 11 ஆசனங்கள் இருந்த நிலையில் தற்போது 6 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.
அரசியலில் பலத்தை ஏற்படுத்துவதற்கு சனத் தொகையை அதிகரிக்க வேண்டும். அரசியல் பலம் கிடைக்கப்பெற்றால் தான் எம்மால் ஏனைய தேவைகளையும் பெறக் கூடியதாக இருக்கும். புலம்பெயர் தமிழர்கள் சொந்த நாட்டுக்கு திரும்பிவருவார்களா?. அவர்களின் வாழ்வாதாரத்தை இங்கு நிறைவேற்றிக் கொடுக்க முடியுமா என்பது கேள்வியான விடய மாக உள்ளது.
சனத்தொகை அதிகரிக்கும் போது குடிதண்ணீரை வெளியில் இருந்து தான் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் உள்ள முக்கிய நீரிணைகளில் வருடத்துக்கு 3 மாதம் மட்டுமே மழை தண்ணீரை தேக்கி வைக்கக் கூடிய நிலையுள்ளது. அதற்குக் காரணம் நீர் ஆவியாக மாற்றமடைந்து விடும். கொழும்பு, கண்டி, காலி பிரதேசங்களில் ஆற்றில் இருந்து குடி தண்ணீர் பெறப்படுகிறது. அதனைப் போன்று குரு நாகல், அநுராத புரம், நுவரெலியா, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களுக்கு குளத்தில் இருந்து தண்ணீர் பெறப் படுகிறது. வடக்கு மாகாணத்துக்கான நீரையும் குளத்தில் இருந்து பெறுவதற்கான சாத்தியக்கூறுகளே பொருத்த முடையது"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

### தபால்

டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப் பங்களை, ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடமும் (அரச அதிபர்) கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### முதலமைச்சரின்

கள் இடம்பெற்று வருகின்றன.
எஞ்சிய பகுதியைப் புனரமைப்பதற்கு கடந்த வருடம் வரவு - செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நூறு மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறித்த நிதியில் வேறு திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டதால் திட்டம் முன்னெடுக்கப்படாமல் இருந்தது. இந்த நிலையில், அண்மையில் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த நிதி அமைச்சின் செயலாளர், கட்டட புனரமைப் புக்காக உடனடியாக நூறு மில்லியன் ரூபா வழங்குவ தற்கு சம்மதித்திருந்தார்.
எஞ்சிய தொகை காலப் போக்கில் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். முதல் கட்டமாக நூறு மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த நிதியில் கீழ்த் தளத்தின் எஞ்சிய பகுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.
கீழ்த் தளத்தில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கான அலுவலகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பன அமையவுள்ளது. இந்தப் பணிகள் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் அளவிலேயே நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, எதிர் வரும் பெப்ரவரி மாதம், கட்டடத்தின் மேல்தள வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ற-5)

### மாவீரர்

கப்படுகிறது. ஆரம்பத்தில் மூன்று நாள் நிகழ்வுகளாக வடிவமைக்கப்பட்ட நிகழ்வு 1990ஆம் ஆண்டு முதல் ஒரு வார நிகழ்வுகளாக மாற்றப்பட்டது. நவம்பர் 21ஆம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். 27ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் துயிலுமில்லங்களில் ஈகச் சுடர் ஏற்றுவதுடன் நிகழ்வு உச்சம்பெறும். அதற்குமுன்னதாக தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையை ஆற்றுவார். புலிகளின் அரசியல் நிலைப்பாடு, அமைதிக்கான வாய்ப்பு, அடுத்த ஒரு வருட காலத்திற்கு அவர்களின் அரசியல் கொள்கைப் போக்கு என்பன இந்த உரை மூலம் வெளிப்படுத்தப்படும். 2008 ஆம் ஆண்டு வரையில் இந்த உரை இடம்பெற்று வந்தது. அதன் பின்னர் மாவீரர் தினத்தை இலங்கையில் கடைப்பிடிப்பதற்கு இலங்கை அரசு தடைவிதித்து வருகிறது. எனினும் ஏதாவது ஒரு வழியில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் மாவீரர் தினத்தில் மாலை 6.30 மணிக்கு எங்காவது பொது இடத்தில் ஈகச் சுடர் ஏற்றப்படுவது வழமையாக இருந்து வருகிறது. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் மாவீரர் தினம் தற்போதும் பெரும் எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.
மாவீரர் நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுடர் ஏற்றப்படுவது கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு இராணுவத்தினரும் முழு மூச்சுடன் களத்தில் குதிப்பது வழக்கமாகி வருகின்றது.
இந்த ஆண்டும் நவம்பர் 27ஆம் நாள். நெருங்குவதையொட்டி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.பல்கலைக்கழகச் சுற்றாடலில் இராணுவத்தினரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, "விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. மாவீரர் என்ற பெயரிலோ அல்லது வேறு பெயர்களிலோ, தீவிரவாதத்தை மகிமைப்படுத்துவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். அத்தகைய நிகழ்வுகளை நாம் தடுத்து நிறுத்துவோம்" - என்றார்.
யாழ்ப்பாணத்தில் இத்தகைய நிகழ்வுகளைத் தடுப்பதற்காக மேலதிக கண்காணிப்பு நிலைகளை அமைத்துள்ளதாகவும், இராணுவத்தினரின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்றும் அவர் மறுத்தார். யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள படையினரைக் கொண்டே, அங்கு அமைதியை நிலைநாட்ட முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.
அதேவேளை, தீவிரவாதத்தை பகிரங்கமாக நினைவு கூருவதற்குத் தாமும் அனுமதிக்க மாட்டார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகணவும் தெரிவித்துள்ளார். (உ-5)

### தமிழீழம்

விழுந்து விட்டார். மைத்திரிக்கு தாங்கையைக் காட்டிவிட்டு அக்காலை கொடுத்திருந்தாலும் பரவாயில்லை, இறுதியில் பாட்டியையே கொடுத்துள்ளனர். மஹிந்த அரசில் இருந்து ஏன் வெளியேறினோம் என விரைவில் அவர் வருத்தப்படுவார்" என்றார் அமைச்சர் அளுத்கமகே.
2010ஆம் ஆண்டில், பொன்சேகாவுக்கு மூளைச்சலவை செய்து அவரை பொது வேட்பாளராக களமிறக்கி அவரைச் சிறையில் அடைத்துவிட்டனர் என்று கூறி மைத்திரிக்கு எச்சரிக்கையும் விடுத்தார் அமைச்சர். "இராணுவ உடைக்குப் பதிலாக, ஜனாதிபதி உடையை அணிவிப்பதாக சரத் பொன்சேகாவுக்கு ஆசை மூட்டினர். இறுதியில் சிறையில் அரைக் காற்சட்டை அணிய வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அவர் இராணுவத் தளபதியாகவே இருந்திருந்தால் கௌரவம் ஏற்பட்டிருக்கும்" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.
பொது எதிரணிகளின் வேட்பாளர் தெரிவு தொடர்பான கலந்துரையாடலுக்குப் பயன்படுத்தப்பட்ட செய்மதித் தொலைபேசிகள் வெளிநாடு ஒன்றினாலேயே வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார். "கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேயசிங்க, அரச சார்பற்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார். அவர் வெளிநாடுகளுக்கு அடிக்கடி சென்று வருபவர். அவர் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அவர்களின் உதவியுடன்தான் இந்த பொது வேட்பாளருக்கான வலை பின்னப்பட்டது. அவர்கள் தமிழீழத்தை உருவாக்குவதற்கே நடவடிக்கை எடுக்கின்றனர். அதற்கு இந்தப் பொது வேட்பாளர் உதவப் போகின்றார்" சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் அமைச்சர்.
"வெளிநாட்டு சக்திதான் பின்னணியில் செயற்படுகின்றது என்றால் அதை வெளிப்படுத்துங்களேன்" என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். "நேரம் வரும்போது ஆதாரத்துடன் வெளிப்படுத்துவோம்" என்று பதிலளித்தார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. (உ-5)

### ஆவணங்கள்

மறைமுக எச்சரிக்கையே இது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.
திருகோண மலை - அனுராத புரம் இடையில் போடப்பட்ட கார்ப்பெற் வீதியை நேற்றுத் திறந்து வைத்தார் மஹிந்த. அதன் பின் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
அரசின் கதவுகள் சலூன் கடை போன்றவை. யாரும் எப்போதும் வரலாம், போகலாம். சுதந்திரக் கட்சியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உட்பட பலர் வெளியேறினர். பின்னர் திரும்பி வந்தனர். ஆனால், நான் ஒருபோதும் வெளியேறவே இல்லை.
கட்சிக்குள்ளும் சுதந்திரம் இருக்கிறது. அரசுக்குள்ளும் சுதந்திரம் உள்ளது. யாரும் வரலாம், போகலாம்.
அரசிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தொடர்பான ஆவணங்கள் என்னிடம் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்தமாட்டேன் - என்றார் அவர்.
அவரது இந்தப் பேச்சு, அரசிலிருந்து வெளியேறியவர்களைத் திரும்பி வருமாறு விடுக்கப்படும் எச்சரிக்கை என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். அவ்வாறு திரும்பி வரவில்லை என்றால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆவணங்கள் தயாராக இருக்கின்றன என்பதையே மஹிந்த கோடிகாட்டியிருக்கின்றார் என்றும் அவர்கள் கருதுகின்றனர். (உ)

### யாருமே

கள் என்பதற்கான உத்தரவாதத்தை என்னால் வழங்க முடியும். சூழ்ச்சிக்கு அகப்பட்டே மைத்திரிபால தவறான முடிவை எடுத்துள்ளார்" என்றார் வன்னியாராச்சி. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் செய்தியாளர் மாநாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முற் பகல் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன வெளியேறிய கையோடு அரசுக்கு எதிரான அலையொன்று உருவாகியுள்ளது. இதன் பிரகாரம் கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஆட்சிமாறும் சூழ்நிலை இருப்பதாக கூறப்படுகின்றது. இதுபற்றி அரசின் கருத்து என்ன? அரசில் இருந்து மேலும் சிலர் வெளியேறவுள்ளனர்தானே?" என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.
"40 பேர் அரசிலிருந்து வெளியேறுவார்கள் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. பின்னர் 20 பேர் என்றார்கள். ஆனால், தற்போது 4 பேர் மட்டுமே அரசிலிருந்து வெளியேறியுள்ளனர். தற்போது தான், ஏன் இந்த முயற்சியில் இறங்கினோம் என்று மைத்திரி யோசிப்பார்" என்றார் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி. (உ-5)

### இந்திய

டைந்ததால் கடலில் தத் தளித்துக் கொண்டிருந்தனர் என்றும், அவர்களை மீட்பதற்காக இராமேஸ்வரத்தை சேர்ந்த 4 மீனவர்கள் வேறு ஒரு படகுடன் வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கொண்டு வந்த படகும் பழுதடைந்ததால் அவர்கம் படகுடன் கடலில் தத்தளித்துள்ளனர்.
அந்தச் சமயம் ரோந்தில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் அவ்விடத்துக்கு வந்தபோது, மீனவர்கள் தமது படகு பழுதடைந்துள்ளமை குறித்துத் கூறியுள்ளனர். அதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு நெடுந்தீவு கொண்டு வரப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்களில் 15 வயதுடைய சிறுவன் ஒருவரும், ஏற்கனவே இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்டு 45 நாள்கள் சிறைக் காவலில் வைக்கப்பட்டு இந்த வருடம் விடுவிக்கப்பட்ட 3 மீனவர்களும் அடங்குகின்றனர். தாம் எல்லை தாண்டி வரவில்லை என்றும் பழுதடைந்த படகைத் திருத்திக் கொண்டு போவதற்காகவே வந்திருந்தோம் என்று இலங்கைக் கடற்படையினருக்கு தெரிவித்த போதும் அவர்கள் தம்மை கைது செய்த னர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றின் பதில் நீதவான் இ.சபேசனின் வாசஸ்தலத்துக்குக் கொண்டு சென்று முன்னிலைப்படுத்தப்படுத்தப்பட்டனர். அதன்போது நீதவான் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-14)

## குற்றங்களும் கைதுகளும்

தென்மராட்சி

### கசிப்பு, சாராய விற்பனை இருவர் கைது

கசிப்பு விற்பனை செய்த மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த பெண்ணும், அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த மிருசுவில் தெற்கு வாசியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இதேவேளை– நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் காணப்பட்ட குடியிருப்பின் உரிமையாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்ட தையடுத்து 3ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [வ–9]

வடமராட்சி

### கசிப்பு விற்ற பெண் சிக்கினார்

துன்னாலை கிழக்குப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்துகொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.
அந்தப் பகுதியைச் சேர்ந்த பறையன்குளம் என்ற இடத்தில் உள்ள வீடொன்றை முற்றுகையிட்டபோத அந்தப் பெண்ணை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர்.
அவர் கைது செய்யப்பட்டவேளை 5 லீற்றர் கசிப்பு மெகா போத்தல்களில் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். [வ–173]

கொழும்பு

### இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்றவர் பிடிபட்டார்

கொழும்பு, நவ.24
சட்டவிரோதமாக இந்தியாவுக்கு தங்கம் கடத்த முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
நேற்று அதிகாலை சென்னை செல்ல முற்பட்ட வேளை, அவரை சுங்கப் பிரிவினர் சோதனை செய்துள்ளனர். இதன்போது அவர் வசமிருந்து நான்கு தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
அவற்றின் பெறுமதி 20 லட்சம் ரூபா என்று சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.
சந்தேகநபர் காவலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. [வ]

# தனியார் பஸ் சாரதி, நடத்துநர்கள் தொடர்பில் இறுக்கமான நடைமுறை

கொழும்பு.நவ.24
தனியார் பஸ்களின் சட்டதிட்டங்கள் மற்றும் போக்குவரத்து வீதி நடைமுறைகளைப் பின்பற்றாது தவறு இழைக்கும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு 3 தடவைகள் மட்டுமே மன்னிப்பு வழங்கப்படும். 3 தடவைகளுக்கு மேல் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களுக்கான சேவை அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.
தனியார் பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் பஸ்கள் நேர தாமதத்தில் செல்கின்றமை, மிகுதி பணம் வழங்காமை மற்றும் பஸ்ஸுக்குள் அதிக சத்தத்துடன் பாடல் போடுதல் போன்ற முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர்.
இந்த முறைப்பாடுகள் தனியார் பஸ்களின் சங்கங்களுக்கு தெரியப்படுத்தும்போது அவர்கள் மீது நட வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தவறுகளுக்கு ஏற்ப சங்கங்களின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவர்களுக்கான சேவை நிறுத்தங்கள் வழங்கப்படுகின்றன. எனினும் குறிக்கப்பட்ட காலங்களின் பின்னர் விசாரணைகள் முடிவடைந்ததும் மீண்டும் அவர்கள் சேவையில் இருப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இனிவருங் காலங்களில் இறுக்கமான நடவடிக்கையாக , சேவை அடையாள அட்டையைப் பறிமுதல் செய்ய அமைச்சு தீர்மானித்துள்ளது.
3 தடவைக்கு மேல் தவறிழைக்கும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் சேவை அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளது.
இதேவேளை- இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பஸ்களில் ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் பொருத்துதல், கமரா பொருத்துதல் குறித்து விரைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (வ-14)

# அம்பாறையில் இயந்திர படகுச் சேவை ஆரம்பம்

## தாம்போதியில் வெள்ளம் பாய்வதால்




அம்பாறை. நவ.24
அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்கின்ற மழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்றக் கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி தாம் போதியின் மேலாக வெள்ளம் பாய்கின்றது: இதனால், அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ள நிலையில், இயந்திர படகுசேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.கரன் மற்றும் கல்முனை கடற்படை முகாம் உயிர்காப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி டபிள்யூ. எம்.யூ. எஸ்.குமாரவும் இணைந்து இந்தச் சேவையை ஆரம்பித்துள்ளனர்.
இதேவேளை-கல்முனை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் வெள்ள நீரை வடியவிடாது தடுத்துள்ள சல்பீனியாதாவரங்களைவெட்டி அகற்றி வருகின்றனர். (வ)

## மருத்துவ சேவையில் 50 தமிழ் பயிலுநர்கள்

யாழ்ப்பாணம், நவ.24
மருத்துவ சேவையில் 5 ஆயிரம் தாதிய உத்தியோகத்தர்கள் இணைக்கும் திட்டத்தில் 50 தமிழ் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 5ஆயிரம் பேர் தாதிய பயிற்சிக்கு இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விண்ணப்பித்தவர்களில் 50 தமிழ் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டு யாழ்.தாதிய பயிற்சிப் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (வ-9)

# இரண்டரைக் கோடி ரூபாவுக்கு ஏலம்போன ஹிட்லரின் ஓவியம்



பிராங்க்பர்ட், நவ.24
ஹிட்லர் வரைந்த ஓவியம் சுமார் இரண்டரைக் கோடிக்கு ஏலம் போயுள்ளது.
ஜேர்மனியில், கடந்த 1914 ஆம் ஆண்டு ஹிட்லர் ஆட்சிக்கு வருவதற்கு முன், தனது இளமைக் காலத்தில் பல ஓவியங்களை வரைந்திருக்கிறார். அந்த ஓவியங்களை வியன்னா ஓவிய கல் லூரியில் ஹிட்லர் விற்பனைக்கு கொடுத்தார். ஆனால், அவர்கள் அதை ஏற்க மறுத் தனர். பின்னர் ஹிட்லரின் 11 அடி நீளம் மற்றும் 8.7 அடி அகலம் உள்ள ஓவியங்களை அவரது 2 சகோதரிகள் பொது மக்களிடம் விற்று வந்தனர். அந்த ஓவியங்களில் ஒருசில வற்றை அவர்து தாத்தா 1916 ஆம் ஆண்டு வாங்கினார். பின் னர், சர்வாதிகாரியாக வலம் வந்த ஹிட்லர் இரண்டாம் உலகப் போரில் படுதோல்வி அடைந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.
இந்தநிலையில், ஜேர்மன் தலைநகரான பிராங்க்பர்ட்டில் உள்ள நியூரம்பர்க் நகரில் நேற்று முன்தினம் மாலை ஹிட்லரின் வாட்டர்கலர் ஓவியங்கள் வீட்லர் ஏல நிறுவனத்தால் ஏலத்துக்கு விடப்பட்டன. அவரது பெரும்பாலான ஓவியங்களை பொதுமக்கள் விரும்பி ஏலத்தில் வாங்கினர். அதில், ஹிட்லரின் இயற்கை எழில் கொஞ்சும் ஒரு வாட்டர் கலர் ஓவியத்தை ஒருவர் இலங்கை மதிப்பில் சுமார் இரண்டரைக் கோடிக்கு ஏலத்தில் வாங்கியுள்ளார்.

# முன்பள்ளிக்கு உபகரணங்கள் வழங்க முன்னுரிமை அளிக்குக

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வேண்டுகோள்

தென்மராட்சி, நவ.24
2015 ஆம் ஆண்டு நாட்டில் உள்ள அனைத்து பிள்ளை அபிவிருத்தி தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்று ஜனாதிபதியால் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் சகல முன் பள்ளிகளுக்கும் பாடசாலை உபகரணங்களையும் முன் பள்ளிக்கான பொருள்களையும் வழங்க முன்னுரிமை வழங்கவேண்டும் என்று பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் செயலாளர் மருத்துவர் வை.டி.நிஹால் ஜயதிலக சகல மாவட்ட அரச அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.
இதனைக் கருத்தில் கொண்டு சகல பிள்ளைகளையும் பாடசாலையில் இணைக்கவும் அவர்களது உடல், உள ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளக்கூடியவாறு பதிவு செய்துள்ள சகல முன் பள்ளிகளிலும் பின்வரும் செயற்பாடுகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.
முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிறுவனத்தின் மக்களின் பங்களிப்புடன் அங்குள்ள பிள்ளைகளின் உடல், உள நலத்துக்கு காரணமாகின்றதும் பொதுவாகப் பயன்படுத்தக் கூடியதுமான உபகரணங்கள் மற்றும் பொது வசதிகளின் தரத்தை மேம்படுத்தல், சுகநல வசதிகளை மேம்படுத்தல், ஒரு முன்பள்ளிக்காக பாடசாலை பொருள்களுக்கும் முன்பள்ளிப் பொருள்களுக்கும் என தலா 50ஆயிரம் ரூபா அறவிடல்.
பாதிப்படைந்துள்ள முன்பள்ளிகள் கட்டடங்களை திருத்தம் செய்வதற்காக அதன் மதிப்பீட்டுப் பெறுமானத்தின் 20 வீதத்துக்கு மேற்பட்ட பெறுமதியை முன்பள்ளி ஏற்றுக் கொள்ளல்.
இதற்காக வழங்கப்படுகின்ற ஆகக் கூடிய தொகை ரூபா ஒரு லட்சத்து 50ஆயிரம் ஆகும். அதே சமயம் அத் தொகையை இரண்டு, மூன்று தவணைகளில் செலுத்தி முடித்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (வ-9)

## ஐந்தாண்டு கால சேவை விவரம் கோருவதால் ஆசிரியர்கள் சிரமம்

*இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.24
புதிய - ஆசிரிய சேவைகள் யாப்புக்கு அமைய பதவி உயர்வுகளைக் கட்டமைப்பது தொடர்பாக 5 ஆண்டு காலத்தில் சேவையாற்றியுள்ள விவரங்களை வழங்குமாறு வலயக் கல்வி அதிகாரிகளால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலால் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிக்கிறது.
ஆசிரியர்கள் தொடர்பான தனிப்பட்ட கடிதக் கோப்புக்களில் அது சம்பந்தப்பட்ட விவரங்கள் காணப்படும் நிலையிலும் அந்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பதானது ஆசிரியர்கள் மீது மேலதிக சுமை ஒன்றைச் சுமத்தியிருப்பதேயாகும் என்பதாகத் தெரிவிக்கும் மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்ராலின்,
அக்காலகட்டத்துள் தூரப் பிரதேசங்களில் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள் இதன் காரணமாகப் பெருத்த சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (வ-22)

# யாழ்ப்பாண மண்ணுக்கு திசைகாட்டி நிறுவனத்தை அர்ப்பணிக்கின்றேன்

## இம்மாற்றம் வணிக ரீதியான உரிமை மாற்றம் மட்டுமே

**நுழைவுக்கட்டணங்கள் எதுவும் இல்லை**
**முற்பணம் என்ற பேச்சே இல்லை**

- வீடு தேடிவந்து ஆலோசனை சொல்லவும் நான் தயார்
- முகப்புப் புத்தகத்தின் (face book) மூலம் முதுகில் குத்த நினைப்பவர்கள் உண்மைத்தன்மை இருப்பின் என்னிடம் நேரில் வரலாம். (face to face)

**பதவியேற்பு நிகழ்வில் திசைகாட்டி புதிய தலைவர் திரு S. சுபசீலன் தெரிவிப்பு**

நிகழ்வின் சில பதிவுகள்


புதிய தலைவர் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கிறார்


மூத்த வங்கியாளர் திரு. V.S. முதலி அவர்கள் அளிக்கும் கௌரவம்


திருமறைக்கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்திரு நி.மரியசேவியர் அடிகள் ஆசிச் செய்தி வழங்குகின்றார்.


மூத்த ஊடகவியலாளர் திரு N. வித்தியாதரன்


யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் திரு N. மகேந்திரராஜா


சிறப்பு விருந்தினர் கனடா மீகாமன் நிர்வாக இயக்குநர் திருமதி S. சுகந்தி கௌரவிக்கப்படுகிறார்.


திசைகாட்டி குடும்பத்தினர்


கலந்து சிறப்பித்தோரில் ஒரு பகுதியினர்

# திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.